தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 **மலர் :** 6

உள்ளுறை

1. சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச்
சொற்கள் 241

(கட்டுரையாய்வு)

பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி

2. தொல்காப்பிய உவமவியல்
காண்டிகையுரை 248

பேராசிரியர். ச. பால சுந்தரம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. சுவடி அழிவும் அழிப்பும் இழப்பும் 271

திருமதி & திரு த. அழகப்பராசு, எம். ஏ.,
இளநிலை ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

4. குயிலின் பாட்டு ... 277

K. சோமசுந்தரம், B. A., B. L.,

5. சாத்தனாரின் உவமைத் திறன் 283

டாக்டர் ஏ. என். பெருமாள்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — புரட்டாசி மலர்: 6

செப்டம்பர் — அக்டோபர் 1985

சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள்

(கட்டுரையாய்வு)

பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி

மீண்டும் மலர்ந்துள்ள 'ஆராய்ச்சி' இதழில் மேற்கண்ட தலைப்பிலமைந்துள்ள கட்டுரையில் சில அரிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. எனினும், பல செய்திகள் ஏற்புடையனவல்ல என்பது இக்கட்டுரையளான் கருத்தாகும். இதனை விளக்குவது இக்கட்டுரையாகும்.

ஓத்திர நெல்லும் நச்சினார்க்கினியரும்

திருவனந்தபுரம் கோயிற் சுவரிலுள்ள 'ஓத்திர கடமை' என்னும் தொடரைக் கட்டுரையாசிரியர் 'ஓத்திரக்கடமை' என அடையாளம் காட்டியிருப்பது பாராட்டி வரவேற்கத் தக்கது. 'ஓத்திரம் என்பது 'ஹோத்ரம்' என்னும் வட சொல்லின் திரிபாகும். இஃதொரு சடங்கைத்தான் குறிக்குமே யன்றி நெல்லைக்குறிக்காது. ஆசிரியர் ஓத்திரம் என்னும் சொல்லுக்கு அப்பெயருடைய நெல்லென்று பொருள் கொண்டமையால் ஓத்திரப்பாடி வளர்தற்கான வரியென்று விளக்கியுள்ளார். 'ஓத்திரக்கடமை' என்பது அக்கினி ஓத்திரம் செய்வதற்காகும் செலவுக்காகச் செலுத்தப்பட்ட வரியென்று கோடலே பொருந்துவது. வண்ணாரப்பாறை, குசக்காணம் என்பவை அவ்வதொழிலாளர் செலுத்திய வரியாகும். இப்பொருளில் கொண்டால், ஓத்திரம் செய்வார் செலுத்திய வரியென்று கொள்ளமுடியும். ஆனால், பிராமணர்க்கு வரிவிலக்களிப்பதே மரபாதலின், அவர் பொருட்டுப் பிறர் செலுத்திய வரியென்பது மிகவும் பொருந்தும். பாடிகாவல், எற்சோறு என்பன போல இதனைக் கொள்ளத் தடையில்லை.

சேர நாட்டு ஓகந்தூரில் ஓத்திரத்திற்குப் பயன்படும் உயர்வகை நெல் விளைந்தமையால், சேரமான் அவ்வூரைத் திருமால் கோவிலுக்குத் தானம் கொடுத்தானென்பது 'ஓத்திர நெல்லின் ஓகந்தூர் ஈத்து' என்னும் தொடரால் விளங்குகின்றது. உ. வே. சாமிநாதய்யரவர்கள் இவ்வகை நெல் இராசான்னம் என்று கூறியுள்ளார்கள். தம் கருத்திற்கு அரண் செய்யும் வகையில், "பறவைப் பெயர்படு வத்தம் — பறவையின் பெயரைப் பெறுகின்ற நெல்லு; என்றது இராசான்னமென்னும் பெயர் பெறுகின்ற நெல்லென்றவாறு. ஆகுதி பண்ணுதற்கு இந்த நெல்லுச்சோறே சிறந்ததென்று இதனைக் கூறினார்; இனி மின்மினி நெல்லென்பாரும் உளர்; இப்பெயர் வழக்கின்மையும் ஆகுதிக்குச் சிறவாமையும் உணர்க." என்னும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தினை எடுத்தாள்கின்றார். சிறந்த அறிஞரும், பாரத்துவாசியுமான இவர் தம்மினத்தவரின் மரபுகளை நன்குணர்ந்திருப்பது இயல்பேயாகும்.

கட்டுரையாசிரியர் நச்சினார்க்கினியரின் கருத்தைப் பிறழவுணர்ந்துள்ளாரென்பது, "இச்சொல் பயன்படுத்தப் பெற்ற சூழ்நிலையை(த்) துரதிர்ஷ்டவசமாகத் தமிழிலக்கியத்

தின் சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியரால் புரிந்து கொள்ள முடியவில்லை'' எனச் சுட்டியுள்ளமை கொண்டு அறியலாம்.

ஒத்திரநெல்லென்றது நன்செய் நிலத்தில் விளையும் இராசான்னமே என்பது விளைநிலம் அதற்காகக் கொடுக்கப் பட்டமை கொண்டு உணரலாம். ஆசிரியர் 'நீவாரா' என்னும் காட்டுநெல் என்று குறிப்பிட்டுள்ளார். அஃதுண்மையேல் நச்சினார்க்கினியர் கூறிபிருப்பார். ஆதலின் இக்கருத்து ஏற்புடையதன்று.

அக்கினி ஒக்திரத்தில் இராசான்னம் பயன்படுத்தப்பட்டது உழவுத்தொழில் நன்கு முன்னேறிய காலத்திலாதல் வேண்டும். உழவுத் தொழில் வளர்ச்சியுறாத முற்காலத்தில் நீவாரா நெல்லை அன்னோர் பயன்படுத்திபிருத்தலும் கூடும். அன்றியும், வேள்வியில் காட்டுப்பசு, நாட்டுப்பசு, என்னும் இருவகைப் பசுக்களைப் பலியிட்டுள்ளவாறு நாட்டு நெல்லையும் காட்டு நெல்லையும் பயன்படுத்திபிருத்தலும் கூடுவதாகும். எனினும் பதிற்றுப்பத்திற் சுட்டப்பட்டது இராசான்னமே என்று கொள்வது பொருத்தமாகும்.

புரவும் புறவும் :

விளைநிலமென்னும் பொருள் கொண்ட 'புரவு' என்னும் சொல்லைச் சங்க இலக்கியம் 'புறவு' என்று தவறாக ஆண்டுள்ளதாகவும், இத்தவறான வழக்கினையே கல்வெட்டும் கையாண்டுள்ளதாகவும் ஆசிரியர் கூறுகின்றார். இக் கருத்தும் பிறழ வுணர்ந்ததன் விளைவேயாகும்.

அரசிறை விளைநிலம் என்னும் பொருள்களில் 'புரவு' என்னும் சொல்லே ஆளப்பட்டுள்ளது (புறம். 75, 260, 297, 330, 379) 'புறவு' என்பது முல்லைநிலப் புன்செய்க்காட்டைக் குறிப்பதாகும். 'முல்லை சான்ற முல்லையம் புறவின்' (சிறுபாண். 169) என வருதல் காணலாம். மருத நிலக்குடி யிருப்புக்குப் புறம்பே — வெளியேயுள்ள பகுதியே புறவு எனப் பட்டது. அதனைக் கொல்லை என்று கூறலாம். புறம் ஐந்து, இருநூற்றெழுபத்தொன்பது ஆகியவற்றில் 'சிறுகிராமம்' என்னும் பொருளில் 'புரவு' என்பது ஆளப்பட்டுள்ளதாக ஆசிரியர் சுட்டியுள்ளார். இப்பாடல்களில் இச்சொல் ஆளப்பெற வில்லை. பாட்டெண்ணைச் சுட்டுவதில் யாதோ தவறேற் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அம்பலத்திற்கும் மடத்திற்கும் கொடுக்கப்பட்ட நிலம் 'புறம்' எனப்பட்டது உண்மையே. அவை குறிப்பிட்ட நிறுவனங்கட்காக ஒதுக்கப்பட்டவை என்று பொருள்படும். புறக்கணித்தல், ஒதுக்குதல் என்னும் சொற்களிடையே அமைந்த உறவை நோக்குக. எனவே, ஏனையோர் பயன்படுத்த முடியாத தனியாக ஒதுக்கப்பட்ட நிலம் (assigned) என்னும் பொருளுடைய 'புறம்' என்பதற்கும் 'புறவு' என்பதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

பைஞ்ஞிலமும் பைஞ்ஞீலியும்

'பைஞ்ஞிலம்' என்னும் சொல் மக்கட் கூட்டம் என்னும் பொருளில் சங்க விலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது.

1. 'நனந்தலைப் பைஞ்ஞிலம்'—இடமகன்ற உலகத்து மக்கள் (பதிற். 17)
2. 'வேறுபடு பைஞ்ஞிலம்'—பல்வேறுபட்ட நாடுகளின் வீரர் கூட்டம் (புறம். 62)
3. 'உண்ணாப் பைஞ்ஞிலம்'—உண்ணா நோன்பு இயற்றும் மக்கள் (பதிற். 31)

பசுமை + நிலம் → பைஞ்ஞிலம் என்றாகும். பசுமை + கிளி → பைங்கிளி, பசுமை + தமிழ் → பைந்தமிழ் என்பன போன்றதிதுவாகும். இச்சொல்லே 'பைஞ்ஞிலம்' எனத் திரிந்தது. நகரமும் ஞகரமும் ஒன்றோடொன்று மாறாடுவன. ஞால்—நால், ஞாயிறு — நாயிறு, ஞெண்டு > ஞண்டு > நண்டு, ஞிமிர்—நிமிர், நான் → ஞான் (மலையாளம்) என்பன காண்க.

'பைஞ்ஞிலம்' என்பதன் அடிப்பொருள் வளமான நிலம் என்பது. இஃது, உலகம் என்பது போலவும் 'ஊர்' என்பது போலவும் இடவாகு பெயராய் மக்களைச் சுட்டிற்று. தாம் உண்டு இன்புறுத்தற்குரிய எல்லா வளன்களும் வாய்க்கப் பெற்ற வளமான ஊரினரெனினும், இறைவன் அருள் வேண்டிப் பாடுகிடந்த சிறப்பினை விளக்கிடவே 'உண்ணாப் பைஞ்ஞிலம்' எனக்குறித்தார். (பதிற். 31).

ஆசிரியர், திருப்பைஞ்ஞீலி என்னும் ஊரின் பெயரையும் பைஞ்ஞிலம் என்னும் திரிபுச் சொல்லையும் இயைபு படுத்தி 'உண்ணாத வாழைப்பழம்' எனப்பொருள் கொண்டார். மேலும், திருப்பைஞ்ஞீலியில், நிவேதித்த வாழைப்பழத்தினை உண்ணாது எறியும் வழக்கம் இக்குழப்பத்தினை மிகுந்துள்ளதாகத் தெரிகின்றது.

'பைஞ்ஞீலி' என்பதற்கு வளமையான வாழை என்று பொருள். இத்தலத்தின் மரம் வாழையாகும். பசுமை + ஞீலி → பைஞ்ஞீலியாயிற்று. என்வே ஞீலி என்பது வாழையைக் குறிக்கும் சொல்லாகும். இதற்கும் நிலம் என்பதன் திரிபான ஞீலம் என்பதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

இறைவனுக்குப் படைத்த உணவை உண்பதே மரபு. வாழைப் பழத்திற்கும் இது பொருந்தும் ஆனால், இத்தலத்தில் மட்டும் அதனை உண்ணாமை ஏன் என்பது வினா. தல மரத்தின் காயையோ பழத்தையோ இலையையோ பயன் படுத்துதல் ஆகாது என்னும் நம்பிக்கையின் பாற்பட்டதாக இம்மரபைக் கொள்ள இடமுண்டு. முற்காலத்தில், கோயிலிலிருந்த வாழைமரத்தின் பழத்தையே படைத்திருக்கலாம். நன்னன் என்பானின் காவல் மரத்து மாங்கனியை உண்ட கோசர் குடிப்பெண்ணை அம்மன்னன் கொன்றான் என்பது வரலாறு.

அன்றியும், வேறொரு காரணமும் கூறலாம். நஞ்சுடைய நாகத்தைப் பைந்நாகம் என்பர். பையென்பது ஈண்டு நஞ்சுடைய பையைக் குறிக்கும். இச்சொல் ஆகுபெயராய் நஞ்சினைக் குறிக்கும். இப்பொருளில், நச்சுத்தன்மைவாய்ந்தது என்னும்மூட நம்பிக்கையால் அப்பழத்தை உண்ணாது தவிர்த்திருத்தல்கூடும். ஒப்பிலியப்பனை உப்பிலியப்பன் என்று கொண்டு, அவர்க்கு உப்பில்லாச் சோறு படைக்கும் நம்பிக்கையை யொத்தது இவ்வழக்கம் என்று கொள்ளலாம்.

வாழியும் வாழ்ச்சியும் :

'வாழி' என்னும் சொல் குறுநிலத் தலைவன் என்று பொருள்படும் சொல் என்பது ஆசிரியர் கருத்து. 'குறையலூர் வாழி' எனத் திருமங்கை மன்னரும், 'நாடு வாழி' என நன்னனும் குறிக்கப்பட்டமையைச் சுட்டி, செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் பெயரிலுள்ள கோ என்னும் சொல்லையும், வாழி என்னும் சொல்லையும் இணைத்துக் 'கோ வாழி' எனக் கொண்டு, இதனைக் 'கோவிசய' என்னும் கல்வெட்டுச் சொற்றொடரோடு இணைத்துக் காட்டியுள்ளார்.

'உண்' என்பதனோடு 'இ' விகுதி சேர்ந்து 'உண்ணி' என்றாதல் போலவும், இடுக்கு + இ → இடுக்கி என்றாதல் போலவும் வாழ் + இ → வாழி என்றாகி வாழ்பவன் என்னும் பொருள் தருகின்றது. பொதுப்பொருள் இதுவாயினும்

சீரோடும் சிறப்போடும் வாழ்தலைக் குறிக்கும். மன்னர்களை இச்சொல் சுட்டும்போது, சிறப்போடு ஆள்பவன் என்று பொருள்படும் ஊராளி என்பது போன்றனவே நாடு வாழி, குறையலூர் வாழி என்பவை. நாடாளும் அரசர் என்னும் பொருளில் 'நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு' எனச் சேக்கிழார் கூறக் காணலாம்.

செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் பெயர் புறம் 387 ஆம்செய்யுளில் மட்டுமே உண்டு. பதிற்றுப்பத்தில் (63.21) 'வாழியாத வாழிய பலவே' என்பார் கபிலர். புகழியூர்க் கல்வெட்டில் 'கோ ஆதன் செல் இரும்பொறை' என்றே உள்ளது. 'பொய்யில் செல்வக்கடுங்கோ' எனப் பதிற்றுப்பத்துப் பதிகம் கூறுகின்றது. எனவே, ஆதன் என்பது அவன் இயற் பெயர் என்பது விளங்கும் கடுங்கோ என்பது மரபுப்பெயர். 'வாழி' என்பதன் பொருளை அறிய இயலவில்லை. ஆனால், வருமிடங்களைக் கொண்டு காண்கையில் 'ஆழி' என்னும் சொல்லே உடம்படுமெய் பெற்று வாழி என்றாயிற்று என்று கருத இடமளிக்கின்றது. செல்வக் கடுங்கோ ஆழி ஆதன் அதாவது, செல்வமிக்க, கடுங்கோ மரபில் பிறந்த ஆணைச்சக் கரம் தாங்கிய ஆதன் என்று பொருள்கொள்ளலாம். கோ என்பதனையும் வாழி என்பதனையும் இணைத்தலாகாது. அது வாழியாயினும் ஆழியாயினும் பின்வரும் ஆதன் என்பதோடு தான் இணையும். இதனைக் கோவிசய என்பதற்குச்சமமானது என்றுகொள்ளமுடியாது வெற்றி பொருந்திய தலைவன் என்பது இதன் பொருளாம்.

ஓரேருழவன்

புறம் 193 ஆம் பாடலின் ஆசிரியர் ஓரேருழவனார். இவர்க்குப் பெயர்தந்த பாட்டு குறுந்தொகையிலுள்ளது. (குறுந். 131) ஓரேர் மட்டுமே கொண்டு உழத்தக்க சிறு நிலமுடையான் ஒருழவன், மழை பெய்த ஈரம் புலர்வதற்குள் உழுதுவிடத் துடிப்பான். அத்துடிப்பினை, மனைவியைக் காணத்துடிக்கும் கணவனின் துடிப்புக்கு உவமை கூறியுள்ளார். இங்குக் கூறிய உவமை நில அளவு பற்றியதாகத் தெரியவில்லை. பல்லவரின் நிவர்த்தனாவுக்கும் இதற்கும் உறவு காண்டல் அவ்வளவு பொருந்துவதாகத் தெரிந்திலது. வறிய வாழ்க்கையைச்சுட்ட 'ஓரான் யாத்த ஒரு தூண் முன்றில்', என்றும் 'ஓரான் வல்சிச்சீறில் வாழ்க்கை என்றும் கூறியுள்ளனர்.

ஓரிற்பிச்சையார் :

குறுந்தொகை 277 இல் இடம் பெறுவார் ஒரு துறவி யென்பதுதான் தெரிகிறது. அவர் சமணரா பௌத்தரா, வைதிகராவென விளங்கவில்லை. அடிக்குறிப்பில் 'அறிவர்' என்றுள்ளது. ஆனால், நாயில்லாத வீட்டில் உணவு பெற்றுண்பவர் என்னுங் குறிப்பு அவர் அந்தணர் என்றுணர்த்துகின்றது. மறையவர் இல்லத்தில்தான் நாயும் கோழியும் வாழ்வதில்லை என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. (பெரும். 196)

கெம்பகரோடம்

அகம் 1,356 ஆகிய செய்யுட்களில்'சிறுகாரோடன்' என்னும் தொழிலாளி சுடப்படுகின்றான். இக்காரோடன் பற்றியும் அவனால் செய் யப்படும் பட்டைக்கல்லின் ஏற்றுமதி பற்றியும் ஆசிரியர் ஆய்ந்து கூறியுள்ள செய்திகள் அவர்தம் நுண்ணிய ஆய்வினைக்காட்டுவனவாகும். பட்டைக்கல் செய்யப் பயன் பட்டகல் 'கொறுண்டம்' என்பது புதுச்செய்தியாகும். ஏழில் மலையிலும், பழனி மலையிலும் மட்டுமின்றிக் காரோடத் தொழில் தஞ்சை மாவட்டத்திலுள்ள கொரடாச்சேரியிலும் சோழர் காலத்திற் செய்யப்பட்டிருக்க வேண்டும். சோழர் கல்வெட்டில் இவ்வூரின் பெயர் 'காரோடுசேரி' என்றுள்ளது. இது காரோடர்சேரி என்பதன் திரிபாகலாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் கட்டுரையாசிரியர் அவர்கள் தம்முடைய கருத்துக்களை மறு ஆய்வுக்குட்படுத்திட வேண்டுமென்பது இக்கட்டுரையாளன் விழைவாகும்.

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

''சிறப்பிற்றீரா நெறிபாடுடைய'' எனக் கூட்டுக. ஐவகைப் பண்பும் நிலைக்களமாக ஒருவன் உவமங் கூறுங்கால் சாலப் பெருமைப்படுத்தியும் சிறுமைப்படுத்தியும் கூறுதற்கு ஏது தன் உள்ளத்தின் கண் எழுங்குறிப்பேயாகலின் ''குறிப்பின் வருஉம்'' என்றும் அங்ஙனம் வருவன சான்றோர் உளங்கொளத் தக்கவாறு அமைதல் வேண்டுதலின் ''சிறப்பிற்றீரா நெறிப் பாடுடைய'' என்றும் கூறினார்.

பெருமை சிறுமை என்பன வடிவு குறித்தும் பண்பு குறித்தும் நின்றன.

எ-டு :- நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத்தனையை
(பதிற்-14)

என்புழி அவ் ஐந்தும் ஒருங்குபுணர்ந்த விடத்து அவ்விளக்கம் எல்லையற்ற பெருமைத்தாயினும் அவ்வுமமம் பொருளின் வண்மையும் வன்மையும் பற்றிய புகழொளியைக் குறித்து வந்தமையின் சிறப்பிற்றீரா நெறிப்பாடுடையதாயினமை அறியலாம்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை (குறள் —)

என்புழி உவமம் மிக இழிந்த சிறுமைத்தாயினும் தலையின் நீங்கிய வழித் தீண்டற்கும் அருவருப்பைச் செய்யும் மயிர் தலையின் நீங்காத விடத்து மிக்க மதிப்பொடு பேணப் படுவதைக் குறித்து நிற்றலின் சிறப்பிற்றீரா நெறிப் பாடுடையதாயிற்று.

இவை பண்பு பற்றியன.

அவாப் போலகன்றதன் அல்குல் மேற் சான்றோர்
உசாப்போல உண்டே நுசுப்பு [பேரா-மேற்]

இவற்றுள் உவமங்கள் கழியப் பெரிதும் சிறிதுமாகக் கூறியிருப் பினும் அவா ஒரு பொருளைப்பற்றி நிகழுமிடத்து அஃது அதன் அளவிற்றாக நிற்கும். உசாமிக நுணுகிச் சென்று இறுதியாக

ஒன்றைத் தேர்ந்து நிற்கும். ஆதலின் அக்குறிப்புக்களான் பொருள்களின் அளவைகள் புலப்படுத்தலின் அவை சிறப்பிற்றீரா நெறிப்பாடுடையவாய்க் கொள்ளப்படும். இவ்வாறன்றி

இந்திரனே போலும் இளஞ்சாத்தான் சாத்தற்கு
மந்தரமே போன்றிலங்கும் மல்லாகம் - மந்தரத்துத்
தாழருவி போன்றுளது தார்மாலை அம்மாலை
ஏழுலகும் நாறுமிணர் [இளம்-மேற்]

என்றாற் போல்வன ஓரேதுவுமின்றிப் பெருமைகள் இறப்பக் கூறப்பட்டமையான் நெறிப்பாடின்றி வழுப்படவந்தனவாம்.

வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி இரிவதுபோ லெம்மருங்கும் — வள்ளற்கு
மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை
மேலாரும் ஏலார் விரைந்து [இளம் மேற்]

என்பது நெறிப்பாடின்றி இறப்ப இழிந்து வந்தவழுவினவாம்.

சூ. 11. அவைதாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
வென்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவ பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை எனாஅ
ஆறாறவையும் அன்னவைபிறவும்
கூறுங்காலைப் பல்குறிப்பினவே

கருத்து : உவமத்தையும் பொருளையும் இணைத்து உவமத் தன்மையை உணரவரும் உவமச் சொற்களின் நிலையும் ஒரு கூற்றுத் தொகையும் உணர்த்து கின்றது.

பொருள் : சுட்டிக் கூறப்பெறும் உவமச்சொற்கள் தாம் அன்ன என்பது முதலாகப் புரைய என்ப தீறாகச் சொல்லப் பட்ட முப்பத்தாறும் அவைபோல்வன பிறவு மாம் அவற்றைக் கூறுமிடத்து அவை பல்வேறு குறிப்பின வாகும்.

உவமச் சொற்கள் (உவமஉருபுகள்) தொழில் முதனிலைச் சொல்லாயும் பெயரெச்சச் சொல்லாயும் வினையெச்சச் சொல்லாயும் வினைமுற்றுச் சொல்லாயும் அமைந்து பொருள் விளக்கஞ்செய்தலின் ''பல்குறிப்பினவே'' என்றார்.

அவைதாம் என்றது ''சுட்டிக்கூறா உவமமாயின்'' என்புழிச் சுட்டிக் கூறப்படுதலும் பெறப்பட்டமையான் அங்ஙனம் சுட்டிக் கூறப்படும் சொற்களை உணர்த்தி நின்றது. உவமம் என்பது உவமஉருபுச் சொற்களைக்கருதி நின்றது.

என்றவை, என்பன இறந்தகாலம் பற்றி நின்ற வினையா லணையும் பெயர்கள். ஆங்கவை என்பதனுள் ஆங்கு என்பது இசைநிறை இடைச்சொல்லாகவும் அவை என்பது சுட்டுப் பெயராகவும் கொள்க. எனாஅ என்பவை எண்ணிடைச் சொற்கள். அவை செய்யுளிசைகருதி அளபெடுத்து நின்றன. ஆறாறவையும் என்பதனை அவை ஆறாறும் எனத்துணிந்துக் கூட்டிப்பொருள் கொள்க.

அல்லபிறவாவன நேர நோக்க (இவை வகைச் சூத்திரத்துள் வருவன) என்பனவும் அமர, அனைய, ஏர்ப்ப, அற்று, செத்து, செப்வ, மலைய (இவை பேராசிரியர் காட்டியன) என்பனவும். ஏந்து, சீர் (இவை இளம்பூரணர் காட்டியன) என்பனவும். ஏச, தேர், நவில் நாறு மயங்க, முரணிய, வாய்த்த, உறைக்கும் வெளவும் (இவை சங்கச் செய்யுட்களுள் காணப்படுவன) என்பனவும் இன்ன என்பதன் கடைக்குறையாய 'இன்' என்பதும், இவ்வாறு ஒப்புணர்த்தி வரும் பிறவுமாம்.

இன் என்பது ஐந்தாம் வேற்றுமைப்பொருள் பற்றி வருமென்பார் பேராசிரியர் 'இன்' என்னும் வேற்றுமை உருபு ஒப்புணர்த்தி வரும் மென்பது உரையாசிரியன்மார் பலர்

கருத்தாகும் இடைக்கால இலக்கண நூலார் கருத்தும் அதுவே அதுபொருந்தாதென்பது சொல்லதிகார உரையுள் விளங்கக் கூறினாம்.

மற்றும் பேராசிரியர் "எனவென்னும் எச்சம் பற்றி வருவனவும்" என்பார் அதனை இன்ன என்பதன் திரிபாகிய என்ன என்பதன் இடைக்குறையாகக் கோடலே உரிச்சொல் மரபிற்கொத்தென்க

இனி இவ்வுவமச் சொற்களை வினை பயன் மெய் உரு என்னும் நால் வகைக்கும் பிரித்து உரிமை செய்து கூறுவார். அவற்றுள் கூறப்பெறாமல் ஈண்டுக் கூறப்பெற்றவை ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட நடுங்க என்னும் ஆறுமாம். ஈண்டுக் கூறாமல் வகைச் சூத்திரத்துக் கூறப்பெற்றவை நேர, நோக்க என்னும் இரண்டுமாம். வகைச் சூத்திரத்துக் கூறப்பெற்ற ஆறும் பொதுவானவை என்பார் பேராசிரியர்.

வகைச் சூத்திரத்துக் கூறப் பெறாத ஆறற்கும் அன்னபிற என்பதனாற் கொள்ளப்பட்டவற்றிற்கும் ஈண்டு எடுத்துக் காட்டுத்தருதும் ஏனையவற்றிற்கு அவ்வச் சூத்திரவுரையுள் காட்டுதும்.

எ. டு.

1. வேலொன்று கண்ணார்மேல் வேட்கைநோய் தீராமோ (பேராசிரியர் மேற்கோள்)
2. வாயென்ற பவளம் (,,)
3. மணிநிற மாற்றிய மாமேனி (,,)
4. அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி (அக–11)
5. வேயொடு நாடிய தோள் (பேரா-மேற்)
6. படங்கெழுநாகம் நடுங்குமல்குல் (,,)
7. மானமர் நோக்கங் கலங்கிக்கையற்று (குறிஞ்சி-25)
8. மலைமாறு மலைக்குங் களிற்றினர் (புறம்-197)
9. நெருஞ்சியனைய வென் பெரும் பணைத்தோளே (குறுந்-315)
10. முத்தேர் முறுவலாய் (ஏர்) (கலி-93)
11. கொடிச்சி யின்குரல் கிளிசெத்து அடுக்கத்துப் பைங்குரல் ஏனல் படர்தருங் கிளி (ஐங்-289)

12. துறந்தார் பெருமைதுணைக் கூறின்வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று
(குறள்-32)

13. யாழ் கெழுமணிமிடற்றந்தணன்
(அகம்-கடவுள்)

14. துணை மலரெழில் நீலத் தேந்தெழில் மலருண்
கண் (கலி-14)

15. எச்சிற் கமையாது பார்த்திருக்கு மச்சீர்
(நாலடி-345)

16. மாசற மண்ணுற்ற மணி ஏசும் இருங்கூந்தல்
(கலி-77)

17. இளிதேர் தீங்குரல் இசைக்குமத்தம் (அகம்-33)

18. நூல்நெறி நுணங்கிய கால் நவில் புரவி
(கால் = காற்று) (அகம்-314)

19. பூ நாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
(நற்-250)

20. வெளவல் காரிருள் மயங்கு மேனியன் (பரி-15)

21. பொருகயல் முரணிய உண்கண் (குறு-250)

22. முகை வாய்த்த முலைபாயக் குழைந்த நின்தார்
(கலி-68)

23. தண்டளிர் வெளவும் மேனி (ஐங்-38)

24. இலங்குமுத் துறைக்கும் எயிறு
கெழுதுவர்வாய் (,,-185)

25. கார் கருதி வார் முரசமார்க்குங் கடற்றானை
(பு. வெ. மா 103)

இங்ஙனம் இவை தொழில் முதனிலைச்சொல் முதலிய பல்வேறு குறிப்பினவாய் அமைந்து பொருளொடு உவமத்தைத் தொடர்புறுத்தி விளக்கி ஒப்பில் வழியாற் பொருள் செய்து வருமென்க.

ஆசிரியர் இவ்வுவமச் சொற்களை (உருபுகளை) ஒப்பில் வழியாற் பொருள் செய்குந எனச் சொல்லதிகார இடைச் சொல்லியலுள் இடைச்சொற்களின் ஒரு கூறாக ஓதினார். அவற்றையே ஈண்டு உவமம் என்னும் குறியீட்டாற் சுட்டிக் கூறினாரென அறிக.

இவற்றை உவம உருபு என இடைக்கால நூலார் வழங்குவர். உவமம் எனினும் உவம உருபு எனினும் உவமச்

சொல் எனினும் உவம வாய்பாடு எனினும் ஒக்கும். ஆயினும் இவற்றை வேற்றுமை உருபுகளைப் போலக் கருதற்க. வேற்றுமை உருபுகள் திணை, பால், இடங்கட்குப் பொதுவாய்ப் பெயரின் பின்னர்ப் பெயரொடு இணைந்து வரும் தனித்து வாரா, தனித்துப் பொருள் பயவா. உவம உருபுகள் பல்வேறு குறிப்பினவாய் அமைந்து தத்தங் குறிப்பிற் பொருள் செய்வனவாக வரும். அதனான் இவற்றைத் தத்தங் குறிப்பிற் பொருள் செய்வனவாகவரும் இடைச்சொற்களின் பின் வைத்து ஆண்டு ஓதினார். தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் மற்று, பிற, தஞ்சம் முதலிய இடைச்சொற்கள் பெயர்த்தன்மையுற்றுப் பொருளுணர்த்தி நிற்குமாறு போல உவம உருபுகளாகிய இடைச் சொற்கள் வினைத்தன்மையுற்றுப் பொருளுணர்த்தி வருமென அறிக.

உவமச் சொற்கள் தனித்துப் பொருளுணர்த்தும் எனக் கூறின் ''தமக்கியல் பிலவே'' (இடை - 1) என்பதனொடுமாறு கொள்ளுமெனின்? கொள்ளாது; என்னை உவமத்தையும் பொருளையும் இணைப்பதற்கு அவை எச்சமாயும் முற்றாயும் முதனிலைச் சொல்லாயும் வினைத் தன்மையுற்று வருங்கால் பெயரையும் வினையையும் சார்ந்தல்லது தனித்து வாராமையான் என்க. அதனானன்றே ஆசிரியர் பெயரொடும் வினையொடும் நடை பெற்றியலும் என்றார்.

இனி உவம உருபுகளுள் சில பெயராயும் நிற்குமெனப் பிறழக் கருதிக் கூறினாருமுளர் அவர் ''மழையேர் ஐம்பால்'' என்பதன் கண் ஏர் என்பது பெயராக நின்றதென்பார். அது மழைநேர் ஐம்பால் என்னும் பாடத்தின் பிழைவடிவமென்க. மற்று ஏர் என்பது ''முத்தேர் முறுவலாய்'' (கலி-) என உவமச் சொல்லாயும் வரும். அஃது ஏர, ஏர்ப்ப, எனவும் வரும் ஆண்டு ஏர் என்பது எழுச்சி இலங்குதல் என்னும் பொருள்படும் உரிச் சொல் வினைத்தன்மையுற்று முதனிலைத் தொழிற் சொல்லாய் நின்றதென்க.

இனி உவமச்சொற்களை அவற்றின் உரியடிகளை (வேர் நிலையை) ஓர்ந்து அவை வினை பயன் மெய் உரு என்னும் நான்கற்கும் வகைப்பட்டுச் சிறந்துரிமை பெற்று வருமாறு முறையே கூறுவார் ஆசிரியர்.

சூ. 12. அன்ன ஆங்கமான விறப்ப
என்ன உறழத்தகைய நோக்கோடு
கண்ணிய எட்டும் வினைப்பாலுவமம்

கருத்து :- வினை உவமத்திற்கு ஏற்கும் உவமச் சொற்கள் இவை என்கின்றது.

பொருள் :- தொழிற்றன்மை கருதிய அன்ன முதலாகிய எட்டும் வினையுவமத்தின் பாலாக வரும் உவமச் சொற்களாம்.

ஒடு எண்ணின் கண் வந்தது. கண்ணிய என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.

எ-டு :-

1. எரியகைந் தன்ன தாமரைப் பழனத்து (அகம்-106)
2. கயநாடி யானையின் முகனமர்ந்தாங்கு (அகம்-6)
3. புலவு நுனைப் பகழியும் சிலையும் மானச் செவ்வரிக் கயலொடு பச்சிறாப்பிறழும் (பெரும்பாண்-269)
4. புலி விறப்ப ஒலி தோற்றலின் (இளம்-மேற்)
5. புலி என்னக் கலி சிறந்தூராஅய் (,,)
6. செருநர்த் தேய்த்த செல்லுறழ்த்தடக்கை (முருகு-5)
7. பொருகளிற்றெருத்தின் புலிதகையப் பாய்ந்து (இளம்-மேற்)
8. மான் நோக்கும் நோக்கு மட நடை ஆயத்தார் (இளம்-மேற்)

எனவரும்.

இவை எட்டும் வினையுவமத்திற்குச் சிறந்து வருதற்குக் காரணம் ஒருவாறு கூறுதும்.

அன்னவென்பது அன் (ஆன்) என்னும் சுட்டடியாகப் பிறந்து நால் வகைக்கும் ஒப்பக் குறிப்பு வினை இயல்பிற்றாய் வருதலின் ஈண்டு முதற்கண் ஓதப்பட்டது.

ஆங்கு என்பது அவ்வாறு என்னும் பொருட்டாகலின் தொழிற் றன்மையைச் சுட்டுதற்குச் சிறந்ததாயிற்று.

மானும் என்பது மன் (மன்னுதல்) என்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்து நிலைபேறு என்பது பொருளாக வருதலின் வினைக்குச் சிறந்ததாயிற்று.

விறத்தல் என்பது செறிவு என்னும் பொருட்டாதலின் வினைக்குச் சிறந்ததாயிற்று.

என்ன என்பது என்று சொல்லுதல் என்னும் பொருண்மைத் தாகலின் வினைக்குச் சிறந்ததாயிற்று.

உறழ் என்பது முரணாதல் எதிர்தல் என்னும் பொருட்டாக லானும் தகைய (தகுதி) என்பது பொருந்துதல் என்னும் பொருட்டாகலானும் நோக்கு என்பது செயல் பற்றிய குறிப்பாகலானும் இவை வினையுவமத்திற்குச் சிறந்துரிமை யாயின. பிற இயைபுகள் உளவாயினும் ஓர்ந்து கொள்க.

சூ. 13 அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்

கருத்து :- அன்ன என்பதற்கு எய்தியதன் மேற்சிறப்பு மரபு கூறுகின்றது.

பொருள் - வினையுவமத்திற்கு உரிய உவமச் சொல் எட்டனுள் அன்ன என்பது வினையுவமத்திற்கேயன்றிப் பயன் மெய், உரு என்னும் பிற வகைக்கும் உவமச் சொல் லாதற்குப் பொருந்தும்.

இது சுட்டடியாகப் பிறந்ததாகலின் பொதுத்தன்மை எய்தி நின்றது.

எ.டு. :- மாரியன்ன வண்மைத் தேர்வேளாய் (புறம்-153)
எனப் பயனுவமத்திற்கும்

இலங்கு பிறையன்ன விலங்குவால் வையெயிறு
என மெய் யுவமத்திற்கும்

'செவ்வானன்ன மேனி' என உருவுவமத்திற்கும் சிவணி வந்தவாறு கண்டுகொள்க.

சூ. 14. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை உவமம்

கருத்து :- பய உவமத்திற்கு ஏற்கும் உவமச்சொல் இவை என்கின்றது.

பொருள் :- எள்ள முதலிய எட்டும் பயனுவமத்திற்கு ஏற்கும் உவமச்சொற்களாம்.

எ - டு :- 1. எழிலிவானம் எள்ளினன் வரூஉம்
கவிகை வண்மைக் கடுமான் றோன்றல்
(இளம் - மேற்)

2. மழைவிழை தடக்கை வாய்வாளெவ்வி (,,)
3. புத்தேளுலகிற் பொன்மரம் புல்ல (,,)
4. விண்பொரு புகழ்விறல் வஞ்சி (புறம்-11)
5. கார் கள்ளவுற்ற பேரிசையுதவி (இளம்-மேற்)
6. இருநிதிமதிக்கும் பெருவள்ளீகை (,,)
7. வேங்கை வென்ற சுணங்கின்
தேம்பாய் கூந்தல் மாஅயோளே (ஐங்-324)
8. விரிபுனற் பேர் யாறு வீழயாவதும்
வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்
(இளம்-மேற்)

எனவரும்.

இவை பயனுவமத்தின் பாலாதற்குக் காரணம் வருமாறு.

என்னுதல் என்பது இழிவு செய்தலாகலானும், விழைதல் என்பது மிகவிரும்புதலாகலானும் புல்லுதல் என்பது புன்மையாதல் ஆகலானும் (தழுவுதல் என்னும் பொருளில் வரும் புல்லுதல் வேறு இதுவேறு என அறிக) பொருவுதல் என்பது மாறுகொள்ளுதலாகலானும் கள்ளுதல் என்பது மயங்குதலாகலானும் மதித்தல் என்பது வியத்தற் பொருட்டாகலானும் வெல்லுதல் மேற்படுதலாகலானும் (வாகையுள் இதனை முல்லை என்பார் சிலர்) வீழ்தல் என்பது தாழ்வுறுதலாகலானும் (விரும்புதல் என்னும் பொருள்படும் வீழ்தல் வேறு இது வேறு) யாவும் அவ்வச்செயலான் வரும் பயனை வெளிப்படுத்தலின் இவை பயனுவமத்திற்குச் சிறந்துரிமையாயின.

சூ. 15 கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்பவென்று
அப்பாலெட்டே மெய்ப்பாலுவமம்.

கருத்து ; மெய்யுவமத்திற்கு ஏற்கும் உவமச்சொற்கள் இவை என்கின்றது.

பொருள் : கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்படும் அக்கூறாகிய எட்டும் மெய்யுவமத்திற்குரிய உவமச்சொற்களாம்.

எ. டு. 1. பல்பொறி யரவின் செல்புறங் கடுப்ப
யாற்றறல் நுணங்கிய நாட்பத வேனில்
(நற்-157)
2. பளிங்கத்தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டேய்ப்ப (அகம்-5)

3. வேய்மருள் பணைத்தோள் நெகிழ (குறு-318)
4. உரல்புரை பாவடி (கலி-21)
5. முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை (இளம்-மேற்கோள்)
6. பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின் (,,)
7. செந்தீ ஓட்டிய வெஞ்சுடர்ப்பகுதி (,,)
8. பரங்குன்றிமயக்குன்றம் நிகர்க்கும் (பரிபா-8)

எனவரும்.

இவை எட்டும் மெய்யுவமத்தின் பாலானமைக்குக் காரணம் : கடுத்தல் என்பது ஐயுறுதலாகலான் அஃது பொருளுள் ஒன்றனைத் துணியா பற்றி வருதலின் மெய்யுவமத்திற்குச் சிறந்ததாயிற்று. ஏய்ப்ப என்பது எய்த்தல் என்பதன் நீட்சியாகும். எய்த்தல் இளைத்தற் பொருட்டாகலின் வடிவுக்கு ஏற்றதாயிற்று. [பொருந்துதல் என்னும் பொருளில் வரும் ஏய்தல் வேறு இது வேறு ஏய்தல் என்பது எச்சமாக வரின் 'ஏய' எனவரும்] மருளுதல் என்பது ஒன்றைப் பிறிதொன்றாகக் கருதும் மயக்கமாகலின் இதற்குச் சிறந்ததாயிற்து. புரை என்பது உயர்பு ஆகலானும், ஒடுங்குதல் என்பது ஒன்று ஒன்றனுள் அடங்குதலாகலானும் ஓட்டுதல் என்பது நீக்குதல் பொருட்டாகலானும் நிகர் என்பது அளவைப் பொருட்டாகலானும் இவையும் வடிவிற்குச் சிறந்துரிமை பெறலாயின.

சூ. 16 :- போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்று
ஒத்து வருகிளவி உருவினுவமம்

கருத்து :- உருவுவமத்திற்கு ஏற்கும் உவமச் சொற்கள் இவை என்கின்றது.

பொருள் :- போல முதலியவாகச் சொல்லப்படும் ஒத்துவரு கிளவிஎட்டும் உருவுவமத்திற்குரிய உவமச் சொற்களாம்.

செவ்வெண்ணின் தொகை விகாரத் தாற்றொக்கது. உருவுவமம் ஏனைய மூன்றனையும் போலாது நிறம், குணம், சுவை அளவு முதலிய பற்றி வருதலின் அவற்றிற்கெல்லாம் இவை பொதுவாக ஓதப்பட்டமையான் அவை யாவற்றிற்கும் இவை பொருந்தி வரும் என்பார் ஒத்துவரு கிளவி என்றார்.

எ-டு :- 1. தன் சொல்லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யும் ஊர் கிழவோனே
(ஐங்-41)

என்பது வண்ணம் பற்றி வந்தது

நாலூர்க் கோசர் வாய்மொழி போல
வாயாகின்றே தோழி (குறு-15)

என்பது குணம் பற்றி வந்தது

உலைவாங்கு மிதி தோல் போலத்
தலைவரம்பறியாது வருந்துமென் நெஞ்சே
(குறு-172)

என்பது அளவு பற்றி வந்தது.

நரம்புளர் முரற்கை போல
இனிதாலம்ம பண்புமாருடைத்தே (ஐங்-402)

என்பது சுவைபற்றி வந்தது. பிறவும் சான்றோர் செய்யுட் கண் இங்ஙனம் ஒத்துவருமாறறிந்து கொள்க.

2. மணிநிறம் மறுத்த மலர்ப்பூங்காயா
(இளம்-மேற்)

3. ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ
(அகம்-30)

4. வெயிலொளி காய்த்த விளங்குமணியழுத்தின
(பேரா-மேற்)

5. கார்விரி கொன்றைப் பொலந்நேர் புதுமலர்.
(அகம்-கடவுள்)

6. தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி
(இளம்-மேற்)

7. நளிய 8. நந்த என்பவனவற்றிற்குச் சான்றோரிலக்கியம் வந்த வழிக்கண்டு கொள்க.

இவை இக்காலத்து அரிய என்பார் பேராசிரியர்.

இவை எட்டும் உருவுமத்திற்குச் சிறந்து வருவதற்குக் காரணம் : போல் என்பது 'பொல்' என்பதன் (பொலிவு) அடியாகப் பிறந்து விளங்குதல் என்னும் பொருள்பட நிற்றலானும் மறுத்தல் என்பது மீளுதல் (மறுபடி) என்னும் பொருட்டாகலின் உவமத்தன்மை பொருட்கண் மீளுதலை

உணர்த்தி நிற்பதாகலானும் ஒப்பு என்பது ஒத்தல் அஃது 'உவ' என்பதன் திரிபாகிய ஒ என்னும் முதனிலை பற்றிப் பிறந்து மகிழ்தலை உணர்த்தி நிற்றலானும் காய்த என்பது காய்தல் (வெப்புறுதல்) என்னும் பொருளுடையதாகலின் பரவி நிற்கும் பண்பை உணர்த்தி நிற்றலானும் நேர என்பது நேர்தல் அஃதாவது நெருங்குதல் என்னும் பொருட்டாகலானும் வியத்தல் என்பது பரவுதல் [வியலென் கிளவி அகலப் பொருட்டே என்பது காண்க] என்னும் பொருள் தருதலானும் [மருளுதல் என்னும் பொருள் தரும் வியத்தல் வேறு இச்சொல் வேறு] நளி என்பது செறிவையும் நந்துதல் என்பது பெருகுதலை யும் பொருளாகக் கொண்டவையாகலானும் இவ்வெட்டும் உருவுவமத்திற்குச் சிறந்துரிமை பெற்றன.

ஆசிரியர் ஈண்டுப் பகுத்துக் கூறிய உவமச்சொற்களின் உரியடிகள் பற்றியும் அவற்றின் பொருள் பற்றியும் கூறிய உரை விளக்கங்கள் அவை உவம உருபாக வருமிடத்தேயாம். மற்று அவ் உரியடிகள் பெயராயும் வினையாயும் வருங்கால வேறு பல்பொருளையும் உடையனவாக வருமென்க. நிரம்பா உரிச்சொல் பற்றிய ஏனைய விளக்கங்கள் உரியியலுரையுள் கூறப்பெற்றமையின் ஆண்டுக்கண்டு கொள்க.

இங்ஙனம் இவ் உவமச் சொற்களைப் பாகுபாடு செய்து ஓதியமைக்குப் பயன் என்னையெனின், சுட்டிக் கூறா உவமத் தொடரின்கண் உவமத் தன்மை விரியாமல் உவமச் சொல் மட்டும் விரிந்து வந்த வழி அவற்றான் இஃது இன்ன உவமம் என விளங்கிக் கொள்ளுதலாம் அஃதாவது

"செல்லுறழ்தடக்கை" என்றவிடத்து இடி அழிக்குமாறு போல அழிக்கும் என உவமத்தன்மை வினைபற்றி வந்த தெனவும் மழைவிழை தடக்கை என்றவிடத்து மழைபோலப் பயன் விளைக்கும் என உவமத்தன்மை பயன்பற்றி வந்த தெனவும் பரங்குன்றிமயக் குன்றம் நிகர்க்கும் என்றவிடத்து இமயம் போல நெடுமையும் பருமையும் பற்றி உவமத்தன்மை மெய்ப்பற்றி வந்ததெனவும்

பொன் போன்ற திருமேனி என்றவிடத்து பொன்னின் வண்ணமென உவமத்தன்மை உருப்பற்றி வந்ததெனவும் விளங்கிக் கோடலாம்.

இத்தொல்லாசிரியன் மரபு கடைச்சங்க நூல்களுள்ளும் சிதையாமற் பேணப்படாமையான் இடைக்காலத்தே பெரிதும்

நெகிழ்ந்து போயினமை காணலாம். இதனானும் தொல் காப்பியத்தின் தொன்மையும் செம்மையும் புலப்பாடாகும்.

சூ 17. தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே

கருத்து: ஆறாறவையும் அன்னபிறவுமாக வரும் உவமச் சொற்களின் பொருளுணரும் முறைமை கூறுகின்றது.

மேற்கூறிய உவமச் சொற்களை ஆசிரியர் 'அன்ன' 'என்ற' எனப் பெயரெச்ச வடிவாகவும் ஏய்ப்ப உறழ ஒப்ப என வினை யெச்ச வடிவாகவும் அமைத்துக் கூறி அவை பல்குறிப்பின என அவற்றின் வடிவ இயல்பு கூறியதன்றி அவற்றின் பொருளையும் அவை வினையுவமம் முதலிய நான்கற்கும் உரிமை பெற்று வருதற்குக் காரணமும் வெளிப்படக் கூறாமையான் புறனடை வகையான் அவற்றை உணர்ந்து கொள்ள இச்சூத்திரத்தான் உணர்த்துகின்றார் என்க.

பொருள்:- அன்ன ஆங்க முதலாக மேற்கூறப்பெற்ற உவமச் சொற்கள் தாம் தோன்றிய உரியடி (வேர் நிலை) யானும் தமக்கு முன்னும் பின்னும் வந்து நிற்கும் பெயர்ச்சொல் வினைச்சொல் ஆயவற்றின் சார் பானும் தத்தம் வரலாற்று முறைமையான் பொருள் விளங்க நிற்கும்.

என்றது ஒப்பில் வழியாற் பொருள் செய்வனவெல்லாம் இடைச்சொற்கள் என இடையியலுள் ஓதினமையான் ஒப்பு என்னும் ஒரு வாய்பாடு தவிர்ந்த ஏனைய வெல்லாம் வேறு வேறு பொருளுடையவை என்பதும் அவை அவ்வப்பொருள் வாயிலாகவே ஒப்புமையை உணர்த்தி நிற்கும் என்று கூறியவாறாம்.

பொருள் தோன்றுதலாவது: அன்ன என்பது அத்தன்மை என்னும் பொருளுடையதன்றே? அஃது புலியன்ன மறவன் என்றவழி புலிக்கும் மறவனுக்கும் உரிய பொதுத் தன்மையான வலிமையைச் சுட்டி நிற்றலின் அவ்வாற்றான் ஒப்புமைப் பொருள் தோன்ற நிற்றலாம்.

"எழிலி வானம் எள்ளினன் வருஉம்" என்றவழி கைம்மாறு கருதாது வழங்கும் தன்மையுடையதெனக் கருதப்படும் எழிலி வானம் பருவ வரையறையுடைய தாகலின் அங்ஙனம் கைம்மாறு கருதாது வழங்கும் கடுமான் தோன்றலின் ஈகைக்கு

முன் சிறவாமையான் எள்ளுதல் என்பது இருபொருட்கண்ணும் உள்ள வண்மையைக் கருதி நிற்றலின் ஒப்புமையை உணர்த்தி நிற்குமாறு காணலாம்.

இவ்வாறே ஏனைய உவமச்சொற்களும் தத்தம் பொருள் சிதையாமல் ஒப்புமை உணர்த்திநிற்குமாற்றை ஓர்ந்து கொள்க.

சூ. 18. நாலிரண்டாகும் பாலுமாருண்டே

கருத்து. உவமத்திற்குந் நிலைக்களம் சிறப்பு நலன் காதல்வலி கிழக்கிடு பொருள் எனப்பட்டவையேயன்றி எண் வகைச் சுவையும் நிலைக்களமாக அமையும் என் கின்றது.

பொருள். உவமத்திற்கு நிலைக்களம் எட்டாகும் பக்கமும் உண்டு. உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை ஏகாரம் அசைநிலை.

நாலிரண்டு என்றது மெய்ப்பாட்டியலுள் கூறிய நகை முதலாய நாடகச்சுவைகளையாம் என்னை ?

மெய்ப்பாட்டியலுள், ஆசிரியர்.

> பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
> கண்ணிய புறனே நானான் கென்ப

எனக்கூறிக் கண்டு சுவைப்போரை அடிப்படையாகக் கொள்மிடத்து.

"நாலிரண்டாகும் பாலுமாருண்டே" என எட்டாக அடக்கிக் கூறினாராகலின் ஆண்டுக் கூறிய நாடகச் சுவையாக அவ் எட்டனையும் சுட்டி உணரும் வண்ணம் அவ்வாய் பாட்டானே ஈண்டு நாலிரண்டாகும் பாலுமாருண்டே" என்றார்.

நாடகத்திற்குரிய சுவை எட்டும் இயற்றமிழன்கண் செய்யுளுறுப்பாக அமைந்து பொருள் புலப்பாடு செய்யுமிடத்து அவை மெய்ப்பாடாகும் நாடகக் காட்சியாகக் காண்போரின் உணர்வளவே நிகழுமிடத்து அவை சுவையாகும் என்பது மெய்ப்பாட்டியலுள் விளக்கப்பட்டது.

எனவே உவமந்தோன்றுவதற்கு அடிப்படை உள்ளத் துணர்வேயாகலான் சுவைப்போரின் எண்வகைச் சுவையும்

நிலைக்களனாக அமையும் என்பது இச்சூத்திரத்தான் உணர்த்தப்பட்டதென அறிக

இதனை உவம நிலைக்களம் பற்றிக் கூறிய "சிறப்பே நலனே" என்னும் சூத்திரத்தின் பின்வைத்து ஒருங்கோதாமல் இங்ஙனம் பிரித்துணர்த்தியமைக்குக் காரணம் சிறப்பு நலன் முதலிய பண்புகள் உவமிக்கப்படும் பொருட்கண் அமைந்து கிடப்பவையாகும். சுவையுணர்வு உவமிக்கப்படும் பொருளின் பண்பும் செயலும் காரணமாக உவமங் கூறுவோனிடத்து அமைந்து வருபவையாகும். ஆதலின் வேறு பிரித்துக்கூறினார் என்க. இவை அவை தம்முள் அமைந்த வேற்றுமைகளாகும்.

எ.டு. 1 நகை : கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவியஞான்றை
நிலஞ்சேர் மதரணி கொண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை
இழைப்பொலிந்தாங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே
(புறம்-278)

இது பாணர் சுற்றத்தார்க்கு இளஞ்சேட் சென்னி வழங்கிய அருங்கல வெறுக்கைகளைப் பாடினிமார், அணியும் முறை யறியாது மாற்றி உறுப்புக்களிற் பூண்டமையான் எழுந்த நகையாதலின் இவ்வுவமத்திற்குப் பேதைமை காரணமாக எழுந்த நகை என்னும் சுவை நிலைக்களமாக அமைந்தமை கண்டுகொள்க.

"களவுடம்படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா நாணி நின்றோள்" என்னும் உவமம் பரத்தையின் அப்பொழுதைய நிலைகாரணமாக எழுந்தது. இதற்கு எள்ளால் பற்றிய நகைச்சுவை நிலைக்களமானமை கண்டு கொள்க.

2. அவலம் : நீர்வார் நிகர்மலர்கடுப்ப ஏர்மறந்து
அறுகுளம் நிறைக்குநபோல அல்கலும்
அழுதல் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே (அகம் - 11)

என்பது தலைவியின் அப்போதைய நிலையை விளக்க எழுந்த உவமமாதலின் இதற்கு அவலச்சுவை நிலைக்களமாயினமை கண்டு கொள்க.

கலங்கவிழ்ந்த நாய்கன்போல் களைதுணைப்
பிறிதின்றிப்
புலம்புமென் நிலைகண்டும் போகலனே என்றியால்
(பேரா)

என்பதுமது.

3. **இளிவரல்:** "வைகுநிலை மதியம் போலப் பையெனப்
புலம்புகொள் அவலமொடு புதுக்கவினிழந்த
நலங்கெழு திருமுகம்" (அகம்–299)

என்பது பருவரல் எவ்வமொடு அழிந்த பெருவிதுப்புறுவி பேதுறும் அப்போதைய நிலைகண்டு தலைவன் கூறியதாகலின் இவ்வுவமத்திற்குத் தலைவன் உள்ளத்தெழுந்த மென்மை பற்றிய இளிவரற் சுவை நிலைக்களமாயினமை கண்டு கொள்க.

பெருஞ் செல்வரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு (முத்தொள்-88)

என்பதுமது. தலைவி தன்னெஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையான் தலைவி சுவைப் போளாயினாள் என்க.

4. **மருட்கை :** அடகின் கண்ணுறையாக யாம்சில
அரிசி வேண்டினேமாகத் தான் பிற
வரிசையறிதலின் தன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறுநல்கியோனே, அன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல் (புறம்-)

என்பது நாஞ்சில் வள்ளுவனுடைய வள்ளன்மை எதிர்பாரா அளவு உயர்ந்தமை நோக்கிக் கூறியதாகலின் இதற்கு ஔவையின் உள்ளத்திலெழுந்த பெருமை பற்றிய மருட்கைச்சுவை நிலைக்களமாயினமை அறியலாம்.

யாமும் காதலெம் அவற்கு எனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையினனாக, உறுபெயல்
தண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய அறிவினேற்கே. (அகம்-26)

என்பது ஊடிச் சென்ற நெஞ்சு கூடலை நோக்கி நெகிழ்ந்தமை நோக்கித்தலைவி கூறியதாகலின் இதற்கு ஆக்கம் பற்றிய மருட்கைச்சுவை நிலைக்களமாதலை அறிக.

5. **அச்சம்:** கானக நாடான் வரூஉம், யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரிவானந்தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்
தளரடி தாங்கிய சென்றது ... (அகம் 128)

இங்ஙனம் தலைவி உவமங்கூறியதற்கு நிலைக்களம் அப்பொழுது தலைவன் வரும் வழிபற்றிய ஏதங்கருதிய அச்சச்சுவையாதலைக் காண்க.

6. **பெருமிதம்:** நீர்மிகின் சிறையுமில்லைத் தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலுமில்லை
வளிமிகின் வலியு மில்லை ஒளிமிக்கு
அவற்றோரன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ்ப் பொதுவெனப் பொறாஅன்
(புறம்-5)

இவ்வுவமத்திற்குத் தண்டமிழ்ப் பொதுவெனப் பொறாத வழுதியின் தறுகண்மையைப் புலவர்கருதியவழி அவருள்ளத்துத் தோன்றிய பெருமிதச் சுவை நிலைக்களமாதலைத் தெரியலாம்.

இகுளை இஃதொன்று கண்டை இஃதொத்தன்
கோட்டினத்தாயர் மகனன்றே மீட்டொரான்
போர்புகல் ஏற்றுப்பிணர் எழுத்திற்றத்துபு
தார்போலத் தழுவியவன் (கலி-103)

என்பதுமது. இதன்கண் தலைவன் ஏறுதழுவிய காட்சி தலைவியின் உள்ளத்திற் பெருமிதத்தைத் தோற்றுவித்தலின் அது நிலைக்களமாக இவ்வுவமந் தோன்றியமை அறியலாம்.

7. **வெகுளி :** .... இந்நிலத்து
ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாதென்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன்போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே... (புறம்-73)

என்பது. மடவோன் எள்ளியமை ஆற்றலுடையோரின் ஆற்றலைப் போற்றாது உறுப்பறை செய்ததாகலின் உறுப்பறை பற்றித் தோன்றிய வெகுளிச்சுவை இவ்வுவமத்திற்கு நிலைக்களமாயினமை கண்டு கொள்க.

ஓர்த்திசைக்கும் பறைபோல் நின் நெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா (கலி-92)

என்பதுமது.

8. **உவகை :** பயங்கெழுபலவின் நெல்லிக்குடவரை
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன நின்
ஆய்நலன் உள்ளி வரின் எமக்கு
ஏமமாகும் மலைமுதலாறே (நற்-192)

தலைவியின் நலத்தை எண்ணுங்கால் தலைவற்கு உவகை பிறத்தலின் தோன்றிய உவமமாகலின் இதற்கு உவகைச்சுவை நிலைக்களமாயினமை தெளியலாம். பிறவும் சான்றோர் செய்யுட்கண் எண் சுவையும் உவம நிலைக்களமாக வருவன வற்றை ஓர்ந்து கொள்க.

இனி இச் சூத்திரம் நால்வகை உவமத்தோற்றம் பற்றியதொரு விளக்கங் கூறுவதாகக் கருதி இளம்பூரணர் வினை பயன் மெய் யுரு என்பவை தொகுக்கும் விரிந்தும் இரண்டிரண்டாக வரும்மென்று உரை கூறுவார். தொக்கு வருதல் "சுட்டிக்கூறா உவமம்" என்னும் சூத்திரத்தாற் பெறப் படுதலானும், தொகுதலையும் விரிதலையும் இரண்டாக எண்ணுவதாற் போந்த பயன் யாது மின்மையானும் அவர் கருத்துப் பொருந்தாமை தெளிவாகும்.

இனிப் பேராசிரியர் இளம்பூரணர் கருத்தினை முதலுரை யாகக்கூறிப் பின்னர் எட்டெட்டாகக் கூறப்பெற்ற உவமச் சொற்கள் இரண்டுவகைப் பட்டுவரும் என்பார். அவ்வுரையான் உவமம் பற்றிய இலக்கணம் யாதொன்றும் பெறப்படாமை யறிக.

நாலிரண்டாகும் பாலுமாருண்டே என்பது மெய்ப்பாட்டிற் குரிய சுவையே என்பது வரும் சூத்திரத்தானும் தெளியப்படும்.

சூ. 19:- பெருமையும் சிறுமையும் மெய்ப்பாட்டின்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.

கருத்து :- மேல் "பெருமையும் சிறுமையும் சிறப்பிற்றீராக் குறிப்பின் வரூஉம் நெறிப்பாடுடைய" என்றார் அங்ஙனம் பெருமையும் சிறுமையும் பற்றிக் கூறிய வழி எய்தும் பயன் இது வெனக்கூறுகின்றது.

பொருள் :- தன்மையானும் அளவானும் பெருமையும் சிறுமையும் பற்றிவரும் உவமத்தின்பால் எண்வகை மெய்ப் பாடுகளின் வழிமருங்கு புலப்பாடாகத் தோன்றும் என்று கூறுவர் புல்வர்.

என்றது பெருமையும் சிறுமையும்பற்றி வரும் உவமம் பொருளை விளக்குதலோடு எண்வகை மெய்ப்பாடுகளையும் புலப்படச் செய்யும் என்றவாறு.

"நாலிரண்டாகும் பாலுமாருண்டே"

என்னும் சூத்திரம் எண்வகைச் சுவைகளும் உவமந்தோன்று தற்கு நிலைக்களமாம் எனக்கூறிற்று. இச்சூத்திரம் பெருமை யும் சிறுமையும் பற்றிவரும் உவமங்களான் எண்வகை மெய்ப் பாடுகள் புலனாகும் என்று கூறுகின்றது. பெருமையும் சிறுமை யும் பற்றி உவமந்தோன்றுதற்கு நிலைக்களம் சிறப்பு நலன் முதலிய ஐந்துமேயாகும்.

எ - டு :- ஞாயிறு திங்கள் நாள்கோள் கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை

எனச் 'சிறப்பு' என்பதனை நிலைக்களமாகக் கொண்டு பிறந்த இவ்வுவமத்தான் இசையும் கொடையும் காரணமாக வந்த 'பெருமிதம்' என்னும் மெய்ப்பாடு புலப்படாதலைக் கண்டு கொள்க.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

எனக் கிழக்கிடுபொருள் நிலைக்களனாகப் பிறந்த இவ்வுவமத் தான் பிணிபற்றிய இளிவரல் என்னும் மெய்ப்பாடு புலப் பாடாதலைக் கண்டு கொள்க.

அவாப் போலகன்றதனல் குல்மேற் சான்றோர்
உசாப் போல வுண்டே நுசுப்பு

எனக் காதல் நிலைக்களமாக வந்த இவ்வுவமங்களான் பெருமை பற்றி வந்த மருட்கை என்னும் மெய்பாடும், காமம் பற்றி வந்த உவகை என்னும் மெய்ப்பாடும் புலப்பாடாதலை காணலாம்

"செருப்பிடைச் சிறுபரல் அன்னன்"

எனக் கிழக்கிடு பொருள் நிலைக்களமாகவந்த இவ்வுவமத்தான் தறுகண்மை பற்றி வந்த பெருமிதம் என்னும் மெய்ப்பாடு புலனாவதைக் காண்க.

கடவுளஞ்சி வானத் திழைத்த
தூங்கெயிற் கதவம் வாயிற்கொண்ட
எழூஉ நிவந்தன்ன பரேரெரும் முழவுத்தோள்

நலனும் வலியும் நிலைக்களமாகவந்த இவ்வுவமத்தான் பெருமை பற்றிய மருட்கை என்னும் மெய்ப்பாடு புலனாதலையறியலாம்.

இங்ஙனம் ஏனை மெய்ப்பாடுகள் எல்லாம் புலப்பாடாக வருதலைச் சான்றோர் செய்யுட்கண் கண்டுகொள்க.

சூ. 20 உவமப் பொருளின் உற்றதுணரும்
தெளிமருங் குளவே திறத்தியலான

கருத்து :- உவமத்தின் திறப்பாடு நோக்கிப் பொருளுணர்ந்து கொள்ளுமாறு கூறுகின்றது.

பொருள்:- உவமஞ் செய்யும் பொருளான் உவமிக்கப்படும் பொருளின் தன்மையை அறிதலேயன்றி உணருந் திறப்பட்டானே பொருளுக்குற்ற பிறநிலை யெல்லாம் தெளிந்து கொள்ளும் இடமும் உளவாம்.

என்றது. உவமத்தின் திறலான் பொருளின் பல்வேறு நிலைகளையும் அறிந்து கொள்ளலாம் என்றவாறு.

எல்லா உவமங்களும் அவ் ஆற்றலுடையனவாக அமையா சிலவே அங்ஙனம் அமைந்து வரும் என்பது தோன்ற "தெளிமருங் குளவே" என்றும் தெளிந்துணர்தல் நுண்ணறிவுடையார்க்கே இயலும் என்பார் "உணருந் திறத்தியலான" என்றும் கூறினார்.

எ-டு:- தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு [குறள்]

என்ற வழி, மணற்கேணி ஊறிப் பெருகுதலாகிய தொழிற்றன்மையை விளக்குதலொடு மணற்கேணி தோண்டுதற்கு எளிதாதல் போலக் கல்வி, அறிவு பெறுதற்கு எளிய வழி என்பதும் மணற்கேணியின் ஊற்றுப் பரந்து பட்டு ஒரு சீராக ஊறிப்பெருகுதல் போல அறிவு பல கோணங்களிற் பரந்து பெருகி நிரம்பும் என்பதும் மணற்கேணியின் ஊற்றுநீர் தெளிவும் தூய்மையும் உடையதாதல் போலக் கல்வியான் வரும் அறிவு தெளிவும் தூய்மையும் உடையதாக விளங்கும் என்பதும் மணற்கேணியின் ஊறிய நீரைப் பயன்கொள்ளாவழி ஊற்றுத் தடையுற்று மேலே பெருகாதவாறு போலக்கல்வியைப் பயிலப் பயிலப் பெருகிய அறிவினைச் சிந்தையிலேற்றுத் தனதாக்கிப் பயன் கொள்ளாத வழி மேலும் மேலும் கருத்துக்கள் தோன்றா என்பதும் பிறவும் அவ்வுவமத்தான் தெரிந்து தெளிந்து கோடலாம்.

"வேனிற் புலனன்ன நுந்தைய நோவார் யார்" (கலி —) என்றவழி, வேனிற்காலத்து நீர்வேட்கைப் பலர்க்கும் இயல்பாதலின் வேனிற்புனலைப் பலரும் அருந்திப் பயன் கொள்ளுதல்போல விழவுக்காலத்துத் தலைவனைத் தொடர்புடையார் பலரும் விரும்பிப் பயன்கோடல் இயல்பென்னும் உவமத் தன்மையை விளக்குதலொடு, வேனிற்புனல் அளவாற் சிறியதாயினும் அருந்துவோர்க்குப் பெரிதும் இன்பம் பயப்பது போலக் காமக்கிழத்தியர் தலைவனைத் கழிக்கோடல் சிறுபொழுதாயினும் அவர்க்கது அவர்தம் சோர்வு நீக்கிப் பெருமகிழ்வளிக்கும் என்பதும் வேனிற்புனலைத் தன்னலத்தான் ஒருவரே உரிமை கொண்டு அருந்துதல் உலகியலுக்கும் ஒப்புரவிற்கும் ஒவ்வாமை போல நாடாளும் கடமை பூண்டுள்ள தலைவன் தன்னாற் புரக்கப்பெறும், ஆடல், பாடல் முதலிய கலைநலத்தான் மகிழ்வூட்டும் பரத்தையர்க்கும் அருள் செய்தலை மறுத்தல் ஒப்புரவாகாதென்பதும் பிறவும் தலைவி கருதித் துனியுறாமல் உள்ளத்தே ஊடல் கொண்டாளாதல் அவ்வுவமத்தான் தெளிதலாம்.

இனித் "திறத்தியலான" என்றதனான்

உவமத்தன்மை வெளிப்பட நில்லாமல் குறிப்பாக நிற்குமிடத்தும் உவமத்திற்கு ஏற்ப நில்லாது பொருளடை குறைந்து வருவழியும் அவற்றை உயர்த்துணர்ந்து தெளிதலும் பிறவும் கொள்க.

எ. டு. "உருள்பெருந் தேர்க்கச்சாணியன்னாருடைத்து" (குறள்) என்றவழி அச்சாணி என்னும் உவமத்தான்

பொருளாகிய அரசன் நாடாளும் பாரத்ததைச் சுமத்தலும், வடிவாற் சிறியனாயினும் வலியாற் பெரியனாதலும் உருள் தன்னிடமாக அமைந்து இயங்குதல் போல ஆட்சி தன்னிடமாக அமைந்து நடைபெறுதலும் பிறவும் தெளியப்படும்.

"மருந்து கொள்மரத்தின் வாள்வடுமயங்கி" (புறம்-180) என்பதும் அவ்வாறு தெளியப்படும்.

"சாறுதலைக் கொண்டென, பெண்ணீற்றுற்றென" (புறம்-82) என்னும் செய்யுட்கண் உவமமாகிய போழ் துண்டுசிக்குப் பல அடை கூறிப் பொருளுக்கு அடை கூறாவிடினும் அவ்வுவமத்தான் போர்த்தொழில் உண்டாட்டும் கொடையும், உரனொடு நோக்கி மறுத்தல் முதலாகிய உள்ளக் கருத்தும் ஒருகணத்துள்ளே வேந்தர் பலரை ஒருங்கு வெல்லுதற்கு விரைகின்ற நிலையும் உடைத்தாதல் புலனாதலைக் கண்டுகொள்க. பிறவும் அன்ன

சூ. 21. உவமப் பொருளை உணருங்காலை
மரீஇய மரபின் வழக்கொடு படுமே.

[வருமே-என்பது இளம்பூரணர் பாடம்]

கருத்து :- உவமப் பொருளை உணர்தற்குரியதொரு மரபு கூறுகின்றது.

பொருள் - மேலைச் சூத்திரத்துக் கூறியாங்கு உவமத்தான் பொருளுக்கு உற்றதெல்லாம் தெளியுமிடத்து உவமத் தன்மையும் பிறவும் நூலின்கண் மருவி வந்த வழக்கொடு பொருந்தித் தோன்றும்.

அஃதாவது உவமத்தின் கண் உள்ள பல்வேறு நிலைகளுள் உவமிக்கப்படும் பொருளொடு பொருந்துவனவற்றையே தேர்ந்து தெளிதல் வேண்டும் என்றவாறாம் "குன்றி யேய்க்கும் உடுக்கை" என்ற வழிக் குன்றியைப் போல அகத்தே கருமை பொருந்தியிருக்கும் எனக் கொள்ளாமல் உடையின் சிறப்புத் தோன்ற அதன் செம்மை நிறம் ஒன்றையே கொள்ளுதலாம்.

"புறங்குன்றிக் கண்டனையரேனும்"

என்புழி அவ் இருநிறங்களையன்றி அவ்இருநிறத்தினையும் கோடலாம்.

“மதிபோலும் முகம்” என்ற வழி அதன்கண் உள்ள மாசினைக் கருதாமல் அதன் ஒளியையும் வட்ட வடிவையும் கோடலாம்.

“தாமரை போலும் முகம்” என்ற வழி அது பகலில் விரிந்தும் இரவிற் குவிந்தும் நிற்கும் தொழிலைக் கருதாமல் அதன் மலர்ச்சியையும் செவ்வியையும் கொள்ளுதலாம்.

“பாவையன்ன பைந்தொடி” என்றவழி பாவையின் உயிரின்மையையும் இயக்கமின்மையையும் கருதாமல் அதன் எழுச்சிமிக்க கவினை மட்டும் கோடலாம.

இவ்வாறே வினை பயன் மெய் உரு என்னும் உவமத் தோற்றம் நான்கற்கும் உரிய தன்மைகளையும் பொருள் விளக்கத்திற்குத் துணைபுரியும் கூறுகளையும் விரித்துணர்ந்து கொள்க.

சூ. 22. இரட்டைக்கிளவி இரட்டை வழித்தே

கருத்து : ஒருவகை உவமம் பற்றியதொரு இலக்கணம் கூறுகின்றது.

பொருள் : இரட்டையாக வரும் உவமம் உவமிக்கப்படும் பொருள் இரட்டையாகவருமிடத்தேயாம்

என்றது; இரண்டு பொருளை இணைத்து விளக்க நேர்ந்த விடத்து உவமமும் இரட்டையாக வருதல் வேண்டு மென்றவாறாம்.

எ. டு :- விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரொ டேனையவர் (குறள் -)

இதன்கண் கற்றாரையும் கல்லாரையும் ஒருங்கு எடுத்து ஒருவமத்தான் விளக்க விலங்கொடு மக்களை இணைத்து உவமித்தவாறு கண்டு கொள்க. இது பிறழ்ந்து வந்த நிரனிறை

“பொன்னொடிரும்பனையார் நின்னொடு பிறரே”
என்பதுமது

இன்றியமையாத நுண்மையான இவ்உவம இலக்கணத்தின் பாங்கினை ஓராமல் அடையடுத்த உவமங்களை இரட்டைக் கிளவி எனக்கருதிப் பேராசிரியர் மயக்கவுரை வரைந்தமையொடு இரட்டைக்கிளவியும்” என உம்மையைக் கூட்டிப்பாடங்கொண்டார்.

தொடரும்

சுவடி அழிவும் - அழிப்பும் - இழப்பும்

திருமதி திரு. த. அழகப்பராசு எம். ஏ;

சுவடிகள் பல காலவோட்டத்தில் காக்கமுடியாமல் தாமே அழிகின்றன; பல தட்பவெப்ப நிலையால் மாய்கின்றன. இன்னும் பல வெள்ளத்திற்கும் தீக்கும் இரையாயின. மேலும் பல அறியாமையால் அழிக்கப்பட்டன. இங்கு அழிவு என்பது இயற்கை அழிவையும், அழிப்பு என்பது மக்கள் அறியாமையால் அழித்ததையும் இழப்பு என்பது அயல்நாடுகளுக்குக் கடத்தப் பட்டதையும் குறிக்கின்றது.

இயற்கை நிலையில் செல்லரித்தல், இராமபாணம் உழுது சேதப்படுத்தல், புகை தூசு போன்றன படிதல், தீக்கிரையாதல், வெள்ளத்தால் அழிக்கப்படுதல் காக்கமுடியாமல் தாமே அழிதல் போன்றவை அடங்கும். மக்கள் அறியாமல் வெள்ளத் திற்கும் தீக்கும் இரையாக்குவதும் கவனமின்மை கையாளு கின்றமுறைஇவற்றால் அழிக்கப்படுவதும் அழித்தலைச் சாரும்.

சுவடிகளின் அழிவிற்குத் தட்பவெட்ப நிலையும் காரணம் தான். சுவடிகள் அதிகமாக எழுதப்பட்டும் எழுதுவிக்கப் பட்டும் வந்தது தென்னிந்தியாவில்தான் என்பதைத் தமிழறிஞர்கள் வலியுறுத்திச் சொல்கின்றனர். ஆனால் ஏடுகள் தோன்றியதாகக் கூறப்படும் தென்புலத்தில் சுவடிகள் அதிக மாகக் காணப்படவில்லை. குளிர்மிகுந்த வடபுலங்களில் திபெத்-நேபாளம்-காஷ்மீரம் போன்றவற்றில் பழைய சுவடிகள் காணப்படுகின்றன. தட்பவெப்பநிலை இச்சுவடிகளின் அழிவிற்குக் காரணமாகும் என்பதை இது வலியுறுத்துகின்றது.

> ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது; கட்ட விழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஒன்றைப் புரட்டும் போது துண்டு துண்டாய் பறக்கிறது. இனி எழுத்துகளோ என்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது [1]

என்று காட்டுவதால் பாணத்தின் நாசவேலை புரிகிறது. மேலும் கடல்கோள்களால் பலநூல்கள் அழிந்தமை வெள்ள அழிப்பிற்குக் காரணமாகலாம்.

ஏடுகள் அதிகமிருக்கின்ற போது அவற்றைப் பாதுகாப்பது சிரமம். ஓலைகள் குறைவாக இருப்பின் அவற்றைப் பக்குவப்

படுத்தி, பாதுகாப்பான இடத்தில் வைத்திருப்பர். இலைச் சாறுகள், கரி, மஞ்சள் போன்றவற்றை அரைத்துத் தேய்ப்பர். இவை இரண்டு வழிகளில் செயல்படுகின்றன. பூச்சிகளைக் கொல்லும் மருந்தாகவும், எழுத்துகளைத் தெளிவிக்கும் வகையிலும் இது பயன்படும். சுவடிகள் அதிகம் இருக்கும் போது அவற்றைப் பரண்போன்ற இடங்களில் கட்டிப்போட்டு விடுகின்றனர். சுவடிகளின் பாதுகாப்பிற்கு நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் தேவை. மேலும் அடிக்கடி சுவடிகளில் தூசு படியாமல் சுத்தப் படுத்த வேண்டும். இவையன்றிக் கவனிப்பாரற்று இருளில் கிடக்கின்றமையின் அவை விரைவில் அழிவதற்கு ஏதுவாகின்றன.

நமது முன்னையோர் பயன்படுத்திய இந்தச் சுவடிகளைப் பின்னையோர் அக்கறை எடுத்துக் கொண்டு பாது காக்காமைக்குக் காலமாற்றமும் காரணமாகலாம். அதன் பயன்பாடு தெரியாது - ஆர்வம் இல்லாது ஏதோ இறை விழாவின் பொருட்டு எடுத்துப் பூசை செய்து வணங்கும் பூசைப் பொருளாக இருந்ததேயன்றிப் பயன்பாட்டுப் பொருளாகக் கருதப்படவில்லை. இன்னும் சிலர் அதைப் பூசைக்குக் கூட எடுத்துப் பயன்படுத்தாமல் நமக்குப் பயன் படாது ; நமது முன்னோர் பயன்படுத்தியது எனக் கொண்டு கவனியாது விட்டுவிட்டனர்.

> நான் பெரிய வித்துவான் பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். என் தகப்பனார் வரையில் அந்தப் படிப்பு இருந்து வந்தது. எனக்கு இலக்கண இலக்கியப் பயிற்சியை அவர் செய்விக்காமையால் இங்கிலீஸ் படித்தேன்... பழைய ஏடுகள் எங்கள் வீட்டில் இடத்தை அடைத்துக்கொண்டு இருப்பதேன் என்றெண்ணிக் கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்து விட்டேன். இப்போது ஒன்றுகூட இல்லை. [2]

என்ற கூற்று கல்லாடத்திற்கு உரைவகுத்த மயிலேறும் பெருமாள் பிள்ளை என்பாரின் பரம்பரையைச் சார்ந்த ஒருவரின் கூற்று. இது நமக்கு அக்காலச் சூழலில் சுவடி அழிந்த நிலையை விவரிக்கின்றது.

சுவடிகள் கட்டாகக் கட்டிவைத்தபிறகு - பரணில் ஏறிய பிறகு சரசுவதி விழாவன்று மட்டுமே கீழிறங்குமாம். பிற நாட்களில் அவற்றை எடுக்கலாகாது. சரசுவதி பூசையன்று மட்டுமே பூசைசெய்து பின் எடுக்கவேண்டும் என்பதை,

> அவ்வளவு சுலபமாகக் காட்டமுடியுமா? இப்போ தெல்லாம் அவற்றைத் தொடலாமோ? சரஸ்வதி பூசையில் தான் அர்ச்சனை பண்ணிப் பூசைசெய்து எடுக்கவேண்டும்.[3]

என்ற கூற்று விளக்கும்.

சுவடிகள் நீண்டகாலம் உயிர் வாழக்கூடிய இயல்பின அல்ல. எனவே தேவை கருதியும், சில நேரங்களில் பெருமைக்காகவும் அவற்றைப் படியெடுத்துப் புதுப்பித்துப் பாதுகாங்கும் பழக்கம் இருந்து வந்திருக்கின்றது.

ஓரு நூல் படியெடுக்கப்பட்ட பின்னர் படியெடுக்கப்பட்ட சுவடிகள் ஆற்றிலிடப்படும் அல்லது ஹோமம் செய்து விடப்படும். சுவடி புனிதமானதாகக் கருதப்பட்டதால் அது வீணேகிடந்து எவர் காலிலும் மிதிபட்டுவிடக் கூடாது என்று கருதினர். படியெடுக்கப்பட்ட பின்னர் அவற்றை ஆற்றிலிடும் வழக்கம் மாறி படியெடுக்கப்படாதபோது அவற்றை ஆற்றி லிட்டு அழிக்கின்ற பழக்கம் தமிழகத்தில் வளர்ந்திருக்கின்றது. இவ்வகையில் நல்ல நிலையில் இருக்கும் சுவடி பழுதடைந்த சுவடி என்ற வேறுபாடில்லாது இரண்டுவகைச் சுவடிகளையும் அறியாமை காரணமாகப் பழம்பாய், கந்தைத்துணிகள் போன்றவற்றுடன் சேர்த்து ஆடிப்பெருக்கு விழாவன்று அற்றில் விட்டுவிட்டனர். இதை,

> பிரதிபண்ணிய பின்பு பழைய ஏடுகள் சிதலமாக இருந்தால் அவற்றை நெய்யிலே தோய்த்து ஹோமம் செய்துவிடுவார்கள்; பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டுவிடுவார்கள்; பிரதிபண்ணி வைத்துக்கொண்ட பிறகே பழைய ஏடுகளைப் பரிகரித்துவிடும் இந்த வழக்கம் மாறி நம்முடைய துரதிஷ்டவசத்தால் எல்லாச் சுவடிகளையும் பரிகரித்துவிடும் நிலை வந்துவிட்டது.

என்று வருந்திக் கூறுகிறார் உ. வே. சா[4].

திருநெல்வேலி வக்கீல் சுப்பையாபிள்ளை என்பவரிடம் சுவடி இருப்பதாக அறிந்து அங்கு உ. வே. சா. சென்றார். அச் சுவடிகள் பற்றி அவரிடம் வினவியபோது,

> எங்கள் வீட்டில் ஊர்க்காட்டு வாத்தியார் புத்தகங்கள் வண்டிக்கணக்காக இருந்தன. எல்லாம்

> பழுது பட்டு ஒடிந்து உபயோகமில்லாமல் போய் விட்டன. இடத்தை அடைத்துக்கொண்டு யாருக்கும் பிரயோசனமில்லாமல் இருந்த அவற்றை என்ன செய்வதென்று யோசித்தேன். அவற்றில் என்ன இருக்கிறதென்று பார்ப்பதற்கோ எனக்குத் திறமையில்லை. அழகான அச்சுப் புத்தகங்கள் வந்துவிட்ட இந்தக் காலத்தில் இந்தக் குப்பையைச் சுமந்திருப்பதில் என்ன பயன் என்று எண்ணினேன். ஆற்றிலே போட்டுவிடலாமென்றும், ஆடிப் பதினெட்டில் சுவடிகளைத் தேர்போலக் கட்டி விடுவது சம்பிரதாயமென்றும் சில முதியபெண்கள் சொன்னார்கள். நான் அப்படியே எல்லா ஏடுகளை யும் ஓர் ஆடிமாதம் பதினெட்டாம் தேதி வாய்க்காலில் விட்டுவிட்டேன்.

என்று கூறினதாக விவரிக்கின்றார் உ. வே. சா.[5]

கரிவலம்வந்த நல்லூருக்கு உ. வே. சா. சென்றிந்தார். வரகுணபாண்டியன் வைத்திருந்த சுவடிகள் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவ்வூர் தர்மகர்த்தாவை நாடிச் சென்று வினவினார். குப்பையும் கூளமுமாகக் கிடத்த அவற்றை ஆகம சாத்திரங்களில் சொல்லியிருக்கின்றபடி செய்துவிட்டதாகக் கூறுகின்றார். அதாவது நெய்யில் தோய்த்து ஹோமம் செய்துவிட்டதாகக் கூறுகின்றார்[6]

இயற்கையால் அழியாது-அறியாமையால்-செயற்கையால் அழிக்கப்படாது எஞ்சிநின்ற சுவடிகளிலும் ஒரு பகுதியை அந்நியர்கள் கொண்டு சென்றுவிட்டனர். அதை எடுத்துச் சொல்லும் சான்றுகளாக லிப்ஸன், கோப்பன்ஹாகன், பாரிசு, லண்டன், ரோம் போன்ற பெருநகரங்களின் நூலகங்களில் காணப்படுகின்ற தமிழ்ச்சுவடிகள் அமைகின்றன.

மேனாட்டினர் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் மருத்துவம் தொடர்பான சுவடிகளைத் தொகுத்து ஆராய்ந் தனர். அவற்றில் ஒரு பகுதி அவர்களின் நாட்டிற்கே சென்று விட்டது. அயல் நாட்டினர் இங்குள்ள தமிழ் நூல்களைக் கடத்திச் செல்ல வேண்டும் என்ற நோக்குடன் இங்கு வருவ தில்லை. ஆனால், அதற்குத் தகுந்த சூழல் ஒன்று மிகச் சுலபமாகத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்றது.

அயல்நாட்டு அறிஞர்கள் இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் வந்து களப்பணி (Feild work) செய்வதை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் ஆய்வுப்பணியில் முதன்மையானதாக சாதனப் பொருட்களைத் தேடுகின்றனர் நம் நாட்டில், வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளில் இருப்பது போன்ற நுண்நிழற்பட நகல் (Micro film) போன்றவற்றின் வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன ; அல்லது அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இவ்வாய்வாளர்கள் நகலெடுத்தலுக்குப் பதிலாக மூலகங்களையே பெற விழைந்து அவற்றை எளிதாகவும் பெற்றுவிடுகின்றனர்.

அவ்வகையில் நூல்களை மூல ஆதாரமாகக் கொள்ளும் போது முதல்பதிப்பு. அரிய பதிப்பு. சிறந்த பதிப்பு, பழைய பதிப்பு, காகிதச் சுவடிகள், ஓலைச் சுவடிகள் என்று அவர்களது எண்ணம் பரந்தும் விரிந்தும் செயல்படத் தொடங்குகின்றது.

அவர்கள் மூல ஆதாரங்களைத் தேடிச் செல்லும்போது அவர்கட்குத் தேவையான நூல்கள் மட்டுமன்றிப் பிறநூல்களையும் பின்னர்ப் பயன்படும் என்ற நோக்கில் சேகரித்து விடுகின்றனர்; அவற்றைத் தங்களுடன் எடுத்துச் சென்று விடுகின்றனர்.

> தரமான சுவடிகளும், பதிப்புகளும் கைமாறுகின்றன; இடம் மாறுகின்றன; நிரந்தரப் பயணமொன்றை மேற்கொண்டு நம் நாட்டைவிட்டே அவை வெளியேறிவிடுகின்றன; வழங்கியோரே விரும்பினாலும் கிடைக்கவியலா நெடுந்தொலைவுக்கு அவைகள் கடத்தப்பட்டு விடுகின்றன ; இதனால் தமிழியலுக்கு ஏற்படும் இழப்பு ஈடு செய்ய முடியாததாகும்.[7]

இப்படி இயற்கையால் அழிந்தும், செயற்கையால் அழிக்கப்பட்டும். அயல்நாடுகளுக்குக் கடத்தப்பட்டும் அழிவு, அழிப்பு, இழப்பிற்குள்ளான சுவடிகள் பலப்பல. எஞ்சியிருக்கின்ற சுவடிகளையாவது தக்காரைக்கொண்டு அச்சேற்றிப் பாதுகாத்தல் தமிழரின் கடமை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தாக வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. தாமோதரம், ப. 46
2. உ. வே. சா, என் சரித்திரம், ப. 694

3. மேற்படி. ப. 685
4. ஃ நல்லுரைக்கோவை, உ. வே. சா. ப. 136
5. உ. வே. சா. என் சரித்திரம், ப. 683
6. மேற்படி. ப. 678
7. அ. தாமோதரன், தமிழ்ச்சுவடிகளின் தலைவிதி, ப.

சான்றாதாரங்கள்

1. சாமிநாதையர், உ. வே. **என்சரித்திரம்**, டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம் சென்னை 41, 1982.
2. ...., **நல்லுரைக்கோவை**, (முதற்பாகம்) கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1958.
3. தாமோதரம்பிள்ளை, சி. வை. **தாமோதரம்**, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம், 1971.
4 தாமோதரனார் ஆ. **தமிழ்ச்சுவடிகளின் தலைவிதி** லண்டன் தி. தமிழ்ச்சங்கம், லண்டன், 1978.

புத்தகம் படிக்கும் கணிப்பொறி

கணிப் பொறிகளின் (கம்ப்யூட்டர்) பயன் விரிந்துகொண்டே போகிறது. சோவியத் யூனியனிலுள்ள எஸ்தோனியன் அறிவியல் கழகத்தின்கீழ் இயங்கும் மொழியியல் மற்றும் இலக்கியத்துறை புத்தகம் படிக்கும் கணிப்பொறி ஒன்றை உருவாக்கியுள்ளது. இதுவரை கணிப்பொறியிலுள்ள திரையில் தமக்குத் தேவையான செய்திகளைப் பார்வை மூலமே பெற்று வந்த நாம், இந்தக் கணிப்பொறி மூலம் செவிவழியாகவும் செய்திகளைப் பெற முடியும். ஆம்! நாம் படிக்க விரும்பும் புத்தகத்தை நமக்காக இந்தக் கணிப்பொறி உரத்த குரலில் படித்துச் சொல்லும்! தட்டச்சு, கையெழுத்துச் சுவடிகளையும் உணர்ச்சிப்பூர்வமாகப் படிப்பதற்குக் கணிப்பொறிகளை எவ்வாறு தயார் செய்வது என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

''நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக்கழகம்''

குயிலின் பாட்டு

K. சோமசுந்தரம், B. A., B. L.,

இன்பம் இன்பம், இன்பம் ;
இன்பத்திற் கோரெல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம்.

என்பது குயிலின் மூன்றாவது பாட்டாகும். இன்ப துன்பமாய உலகில், இன்பத்தையே உயிர்கள் யாவும் பொதுவாக நாடுகின்றன. 'எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது, தானமர்ந்து வரூஉமே வற்றாகும்' என்பது தொல்காப்பியம். வாழுமுயிர்கள் இன்புற்று வாழ்தலை இயல்பாகக் கொண்டாலும், மரபைப் பேணும் புலனின்பத்தால் நிலையாய இன்பம் பெறுவதில்லை. அளவு மீறி துய்க்கப்படும் ஐம்பொறியின்பம் துன்பத்தில் சிக்கி அல்லலுற்று உழலும். புன்மைப் புலன்களின் போக்காய் மனம் திரிந்து புலனின்பத்திற்கோர் எல்லை காணுமாறு காமியஞ் செய்து துய்த்தால், அது தொடர்பின்றி அறும் துன்பமாய் முடியும். புலன்கள் யாவும், வாழ்வில் மயங்காது, புன்மை நிலையிலிருந்து நன்மை நிலைக்குப் பையப் பைய முயன்று முன்னேறும் இயல்புடையவை. கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், உற்றும் அறிகின்ற புலனுணர்வு ஒருங்கே விலங்கு நிலையினாலும் அதன் கீழ்ப்பட்ட உயிர்களிடத்தும் காணக் கிடைப்பதில்லை. ஐம்புலன்களும் தங்குமிடம் மனமாதலால், அது வன்மையுடைய முதிர்ந்த வனப்பு நிலையினைப் பெற்றிருத்தல் வேண்டும். ஐம்புலன்களாகிய கருவியால் ஒருங்கே நாயகிபால் கண்ட இன்பம், தெரிவரிய சிற்றின்பமானாலும், அதுவும் அழியும் பான்மைத்து. மற்றும் காதலரது காதலில் ஐம்புலனாற் சார்ந்த பிழையும், மனத்தால் மருவிய பிழையும் எழல் இயல்பு. காதலின்ப மிக்குழி, காதலர் கற்றவை யாவும் கைகொடா. அதனால் துன்பமும் துயரும் தோன்றுதல் இயற்கையானது. ஒரு பொறியுணர்ச்சியால் இன்பம் நுகரும் ஒவ்வொருவகை உயிர்கள் அழிவு உறுதலை, விரிநூற் கல்வி கேள்வியுடைய உரையாசிரியர் பரிதியார்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள"

என்ற குறளுக்கு (1101) ஏனைய உரையாசிரியர் போல் பதவுரையோ, பொழிப்புரையோ வரையாது, அக்குறட்

கருத்தினைத் தனக்குத் தோன்றும் வகையில் அரிய விளக்கம் செவ்வனம் செய்து ‘விளக்கு கண்டு அழிந்த விட்டிலும், யாழ்கேட்டு அழிந்த அசுணமும், இரைகண்டு அழிந்த மீனும், செண்பக மணம் உண்டு அழிந்த வண்டும், மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும், ஒவ்வொரு புலனால் அழிந்தன எனச் செப்பி, ஐம்புலனும் ஒண்டொடிபால் கூடியதால் எத்தகைய இடர் காமுகர்க்கு நேருமோ’ என அஞ்சி விதிர்த்தது அறியற்பாலது. எனினும் ஐம்புலன் உணர்வாய மனம், ஐவருக்கும் அஞ்சி, இறையுடன் ஒருமைப்பாட்டு காதலன்பில், வளரும் அறிவும் ஒளிரும் ஒட்பமும் தளிர்க்குமாறு திளைத்து, காதல் கிழமையின் பேரின்பத்து அமிழ்தால் ஆக்கமுற்று சொல்லுரையற்ற சகானந்தமும் பெருகப் பெறும். இஃதே காதலுணர்வை கடவுளரது உணர்வாக மனதிற்கு இன்பம் செய்து நிலை பேறுடையதாய் விளங்குமென்பது அறியப் பெறும். பேரின்ப ஞானமின்றேல், காதற்காமத்தை கடக்க இயலாது பற்றியே ‘கண்டு கேட்டு’ (1101) என்ற குறள் திருக்கைலாய ஞானவுலாவில், 173-ம் கண்ணியில் குறிப்பாக சிவசம்பந்தமும் சம்மதமும் பெற்றுள்ளதாக எடுத்தாளப் பட்டது வியப்பிற்குரியது. ஆகவே, நெறியொடு இயைந்து உள்ளத்திற்கு நிறைவினை உணர்த்தும் சால்பு கொண்டு உயிர்க்கு, இஃது இன்பம் பயப்பதாய்த் திகழ்ந்து, இகபர நலன்களையளித்து மெய்யின்பமும் மெய்ஞ்ஞானத்தையும் அருளி அத்துவித முத்தியை வழங்க வல்லது. இது அண்ணிக்கும் வாழ்வினை நடத்தும் மெய்யறிவின் கருவூலம். எங்கும் இலாததோர் இன்பம் நல்கும் ஒரு உலவாக்கிழி. எனவே இப்பாட்டினை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து அதன் உண்மையினை ஆழ்தல் வேண்டுவது இன்றியமையாததாகும்.

உலகினை இறையருள் நடத்துவதைத் தெளிந்தால், உயிர் வாழ்வை இயக்கும் தெய்வத் தன்மையுள்ள ஒரு வித சக்தி, நம்பால் உளதென்பது உணரப்படும். அச்சக்திதனில் மனம் படிந்து அடங்கினால் சித்தம் சுத்தமாகும். அத்தகைய சித்த சுத்தத்தினால் இயல்பாய் சிற்சக்திக் கனல் எழும். அக்கனலை வாயுவழக்கினையறிந்து அமுதநாடி மூலம் படிப்படியாக ஆற்றலுடன் மதியாற்செலுத்தி முடிவில் யோகப்பாலைப் பருக, ஓம் எனும் ஒலி முழக்கத்தால் பேரின்பச் சிலிர்ப்பு உண்டாகும். இன்பமுதிர்ந்த முதிர்வாய சக்தி ஒளிப்பொருளுண்மை புலனாகும். மனவாசகம் கடந்த இந்த நுண் பொருளை மனக்கண்ணால் எளிதே காண இயலாதெனினும், இவ்விறைப்பொருளினை சாதாரணமாக அனைவரும் இடை

விடாது, இறையன்பு, இறைவணக்கம், தெய்வ நல்லோர் இணக்கம், சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் ஆராய்ச்சிகள் முதலாய சாதனங்களின் வழி ஒருவாறு தெளியவாகும். அத்தெளிவே இன்பத்தமுதூறும் பேரின்பமாகும். இதனால், வாழும் ஆருயிர்கள் இன்புறும்; வாழ்வும் இன்ப நிலையமாகும். ஆனால் மனத்தைப் புலன்கள் வழி, அறம், தவம் வழிபாடு முதலாய உணர்வொழுக்கத்து விழுப்ப முறைகளால், அலையவிடாது செலுத்தி, அந்தக் கரணத்துக்கப்பாலுள்ள உயிர் இறைவனை, சித்த விருத்தி பக்குவத்திற்கேற்ப, மனம் சிந்தித்து இறைமைப் பேரின்பம் எய்துதல் இன்றியமையாது வேண்டப்படும். பாரதியார், குயில் பாட்டின் உள்ளார்ந்த கருத்தைக்காண விரும்பி, அப்பாட்டின் சுவை நலத்திலும், ஒலி நயத்திலும் தன்னை மறந்து ஒன்றிடவே; அவரது அறிவு மனம், வீட்டு நெறியின் கண் உறங்கிட, அவருக்கு அரியதோர் இன்ப முதிர்வு வாய்ந்துள்ளதென்பது பெறப்படும். வாழ்வினைத் தூய இன்ப வழியில் திருத்தமுறச் செய்வதே இப்பாட்டின் அக நோக்கமென்க.

இனி, குயிலின் அடுத்துபாட்டினைக் காண்குவம். குயிலின் நாதமயமாய பாட்டைப் பாரதியார் கேட்டபொழுதே, அவர் நெஞ்சம் நாதமூலத்தில் ஈடுபட்டுத் திளைத்திடவே, இயல் பாகத்தம் அனுபவ நுகர்வால் அவரது நெஞ்சம் நாத ஒளியிலே நிலைபெறலாயிற்று. நாதத்தைப் பாரதியார் வேத மந்திர நாதமெனக் கொண்டு, நாத ஒலியோடு தமிழ்ச் சொல் இசையையும் சேர்க்க முனைந்து நாதங்கள் சேரும் நயத்தினை உணர்ந்தார். அவர்,

> 'நாதவார் கடலின் னொலியோடு
> நற்றமிழ்ச் சொல் இசையையும் சேர்ப்பேன்'
>
> பூதங்கள் ஒத்துப் புதுமை தரல் விந்தையெனில்
> நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ ?

என்பர். அளப்பரிய நற்பயன் தரும் நாதம், வாழ்விற்கும் ஆன்மாவிற்கும், இயற்கைக்கும் இறைமைக்கும், இகத்திற்கும் பரத்திற்கும் தொடர்பினை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டு செம்மை சான்ற தெய்வக் கலை வாழ்வை உணர்த்தி அதனை வளர்க்கவல்லது என்பதை

நாதம், நாதம், நாதம்;
நாதத்தேயோர் நலிவுண்டாயின்
சேதம், சேதம், சேதம்,

என்ற குயிலின் பாட்டின் மூலம், பாரதியார் உணர்ந்து, நாதம் நலிந்து மெலிந்தால் சேதப்பிளவு ஏற்படும் என மொழிந்து நம்மை தத்துவ விசாரணைக்கு அழைத்துச் செல்கிறார். நாதம் என்பதற்கு ஒலியென ஒரு விளக்கப்பொருள் உள்ளது. ஓசைக்கும் ஒலிக்கும் அடிப்படையானது நாதம். ஓசை நாதத்தின் விருத்தி : ஒலி ஓசையின் விருத்தி, பிரணவத்தில் நாதம் பிறந்து உலகுவெளியானதென்பதும், உலகமே நாத வடிவம் என்றும் மறைகள் முறையிடும். நாதம் இறைக்கு அணித்தாய் உள்ளது : வடிவைக் கடந்தது. நாதத்தைக் கொண்டு ஞானாநந்தக் கூத்தர் ஆடினாரென்றால் நாததத்துவத்தின் சிறப்பு நன்கு புலனாகும்.

நாதமும் பிறணவமும் தோன்றுங் காலையில், அவை இசைமயமாய் பிறக்கின்றன. நாதத்தின் நல்லிசையில் இனியவற்றை, இசைமொழிகளெனவும், மற்றவற்றை இயல் மொழியாய் எடுப்பதும், தண்டமிழோரது தொன்று தொட்டு வரும் வழக்கமும், பழக்கமுமாகும். இந்த மரபை அனுசரித்துத் தமிழ்ச் சான்றோரர் பாவோடணைதல் இசையென்றும் பண்ணென்றும் பகர்வர். எனவே, நாதம் இசையென்றும் பண்ணென்றும் வழங்கப்படும். ஓங்காரதத்துவத்தில் எழும் நாதத்தினை வாலாமையோடு தொழில் செய்யுமிடத்து, தாளத்தின் பண்பும் வளமும் அறிந்து, சேதம் ஏற்படாதவாறு விருத்தி செய்தல் வேண்டும். இதன் சிவதத்துவத்தை நன்கறிந்துணர்ந்தோர், இறைவனை நாததத்துவத்தில் அனுபவித்துப் போற்றுவர். இதனை அருளாளர் அப்பர் பெருமான் தன் சுவானுபூதியாய மெய்யுரையில்

'கலங்கவிருவர்க் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன், கருவாய் நின்று
பலங்கடரித்து கந்த பண்புங் கண்டேன்
பாடலொலியெலாம் கூடக் கண்டேன்'

எனத் திருவாய்மூர், செழுமைத் திருத்தாண்டகத்தில் (10) திருவாய் மலர்ந்துள்ளதைக் கருத்தாய் மனத்தில் பதித்தல் வேண்டும். இது கொண்டு, நாததத்துவம் ஆத்மாவிற்கும் அந்தக் கரணத்திற்கும் இன்பம் தந்து, ஆன்மாக்களுக்கு

ஞானத்தை எழுப்பும் சக்தி வாய்ந்தது என அறியப்படல் வேண்டும். மற்றும், நாதம் உள்ளத்தையும் ஊடுருவி ஆன்மாவில் கலந்து இறையுணர்வை தூண்டவல்லது என்பதும் பெற்றாம். பாரதியார், இவற்றை நன்குணர்ந்து, பாட்டு அமைதிமிக்க இன்பம் அளிக்கும் நலிதலிலா ஒலியினையுடைய தென்றும், நாதமயமாய பாட்டு கவிதைபோல் சாந்தம்' கொண்டு, அனுபவ நுகர்வினை பாட்டொளியால் விளக்கி, மெலிதலிலா அமைதியினை நிலைநாட்டும் தகுதி வாய்ந்த தெனக் கொண்டார். நாததத்துவத்துக்கு பாரதியார், ஒருவித விஞ்ஞான தீட்சைவழி, புத்துணர்வைப் பெற வைத்துள்ளது அறிஞர்கள் அறிந்து உய்க.

இனி அடுத்த பாட்டின் இயல்பினைக் காண்போம்.

'தாளம் தாளம், தாளம்
தாளத்திற்கோர் தடையுண்டாயின்.
கூளம், கூளம், கூளம்'

தாளம் திப்பியமாய ஒரு கால அளவையினை கணிக்கவல்லது. தாளக்கட்டு, தன் தனித் திண்மையினை இழந்தால், அது தொடர்பற்ற கூளமாகவே சிதைந்து விடுவதோடல்லாது, மாண்பகன்று மதிப்புமிழந்து போகும். கால அளவுப் பிரமாணம் கடந்தால், இசையின் இனிமை குலைந்து விடும். தாளம் இசைக்கு எழில் கொடுத்து, இசைக்கு உண்ணின்றதோர் சுவை யினையும், பாடற் பொருளின் இனிமையையும் ஒரு சேரக் கூட்டி எடுத்துக் காட்டும். தாளத்துக்கு கால அளவை இழந்து விடின், அற்புத இசையும் தன் அமைதியை இழந்து தாழ்ச்சி யுறும் : இசை பொறிக்கும் வெறுப்பாகவேயிருக்கும். தாள நிலை இசை நிறைவோடு பொருந்தி இறைத் தத்துவப் பொருளினை உணர்த்தல் வேண்டும். இல்லையேல், அது விகார நிலையினை அடைந்து விடும். பழங்காலத்தே, தமிழ் அரிவையர்கள், தாள ஞானலய உணர்வோடு, முன் கையால் தம் தொடை தட்டி மெல்லிய விரலால் எண்ணி, நுட்பமுற தாளத்தை அளந்ததாகக் கூறும் ஒரு இரசமான செய்தியினை,

ஒத்த குழலின் ஒலியெழ முழவிமிழ்
மத்தரி தடாதரி தண்ணுமை மகுளி
ஒத்தளந்து சீர்தூக்கி ஒருவர்பின் படார்

நித்தம் திகழும் நேர் இறைமுன் கையால்
அத்தக அரிவையர் அளத்தல் காண்மின்'

எனப் பரிபாடல் நயமுறப் பகர்வதை நோக்குக.

தாளம், பாட்டிற்குத் துணையாக ஒலி செய்து இசையின்பத்தைப் பெருக்கி மகிழ்ச்சியினை ஊட்டல்வேண்டும். இசையின்பங்களைக் காட்ட பாட்டிற்கேற்ப, தாளம் அமைப்பது தான் பொருத்தமாகவும் அவசியமாகவுமுள்ளது. அதுபோது தான், பாட்டினிலேயுள்ள கலை தோன்ற, அதன் உயிர்ப்புக் களையுண்டாகும். இசையினிமையோடு ஏற்ற தமிழ் மந்திர நாதமும் தாளமும் அமையுமாயின், பாட்டினிலே மிளிரும் கருத்துச் சொற்களும், நளினமாய வார்த்தைக் குறிப்புகளும் நம்மைக் கவர்ந்து, மெய்மறக்கச் செய்து, இறைபக்தி உணர்வில் ஆழ்த்திலிடும்.

.... சுவை
நண்ணும் பாட்டினோடு தாளம்— மிக
நன்றா யுளத்தழுந்தல் வேண்டும்'

என்பது பாரதியார் கருத்து. எனவே, இன்சுவையினை நணுகும் பாட்டினோடு, தாளமும் பொருந்தியிருந்தால், பாட்டும், கவிதைத் தன்மை வாய்ந்து உளத்தே நன்கு ஊன்றி நிற்கும். தாளத்தை ஓசையோடு சேர்த்து உணர்தல், பயிற்சி மிக வல்லார்க்கு இயல்வதாகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

மக்கள் தொகை - ஒரு வரலாற்றுப் பார்வை

இன்று உலகின் மக்கள் தொகை 480 கோடி (4. 8. பில்லியன்) குறியளவை எட்டியுள்ளது. கி. பி. முதல் ஆண்டில் உலகின் மக்கள் தொகை 30 கோடிதான். 1500 ஆண்டுகளுக்கு பிறகு, இது இரட்டித்து, 60கோடியாயிற்று. ஆனால் 1900 இல், அதாவது 400 ஆண்டுகளுக்குள், இது 170 (1. 7 பில்லியன்) கோடியாயிற்று. கிட்டத்தட்ட 3 மடங்குப் பெருக்கம். 1950 வரை மக்கள் பிறப்பு விகிதம் 1 சதமானந்தான். ஆனால் அதற்குப்பின், 2 சதவீதமாயிற்று. அதன் பலனாக, 30 ஆண்டு களுக்குள் அதாவது 1980 - களில், 250 கோடியாகவிருந்தது 480 கோடியாயிற்று.

"நன்றி ! அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்".

"சாத்தனாரின் உவமைத் திறன்"

டாக்டர் ஏ.என். பெருமாள்

அறிமுகச் சிந்தனை

உவமை மொழிக்கு மெருகூட்டி அழகு சேர்ப்பதனால் அணியாகக் கருதப்பட்டாலும் வளமான பொருளை எளிதாக வும் இனிதாகவும் விளக்கும் ஆற்றல் மிக்க இலக்கிய உத்தியாக அமைவதனால் மிகுந்த சிறப்பை அடைகிறது. இடத்துக்குத் தக்கவாறு பொருத்தமாக அமையும் உவமைகள் ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவும் கைவிடா நண்பனுக்கு ஒப்பாகும். இலக்கியப் படைப்பை இனிய கலையாக்குவதில் உவமையின் பங்கு முக்கியமானது. கலையின் பயனை எளிதாகப் பெறுவதற்கு அது மிகுதியாக உதவுகிறது. சொல்லுக்குள் அடங்கி இருக்கும் பொருட் சிறப்பை ஆற்றலுடன் வெளிக் காட்ட உதவும் அரிய கருவியாக உவமை விளங்குகிறது.

சீத்தலைச் சாத்தனாருக்கு மணிமேகலைக் காப்பியத்தை உருவாக்க உவமைகள் எவ்வாறு உதவியுள்ளன என்பதைக் காண்பதுடன் அவர் கையாண்ட உவமைகள் பொருள் சிறப் புடன் விளங்கிய பாங்கினையும் அறிய முயலலாம். முன்னிலக்கிய அறிவுடன் கற்பனை ஆற்றலும் கொண்டு பழமைப் பதிப்புக்களாகவும் புதிய படைப்புக்களாவும் உவமை களை இலக்கியத் தேவை கருதி இணைத்துள்ள செம்மையினை யும் கண்டுணரலாம். சாத்தனார் உவமைகளை அமைத்துள்ள முறைகள் சிந்தனைக்கு உரியனவாக உள்ளன.

உவமைகளின் அமைப்பு முறை

பொதுவாக உவமைகளின் அமைப்பு உவமை, உருபு, பொருள் என்று ஒழுங்கில் சீராக அமையும். சாத்தனார் இந்த ஒழுங்கை மிகுதியான உவமைகளில் கைக்கொண்டுள்ளார். போல், போல, போன்று, போன்ம், ஒப்ப, என, அன்ன, ஆக, என்ன, ஆங்கு, அனைய, ஏய்ப்ப, ஆகிய உருபுகள் முறையாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. மிக அறிதாக வரும் 'எள்ள' என்ற உருபுக்கு ஓர் இடம் கொடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால் அது ஐயத்துக்கு இடம் தருவதாக அமைந்துள்ளது.

"இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி"

(பதி. 1 - 2)

என்று சம்பாபதியைக் குறிப்பிடுவது சிந்தனைக்கு உரியதாக உள்ளது. ஞாயிற்றை எள்ளும் தரமாக விளங்கும் ஒளி பொருந்திய மேனியை உடைய சம்பாபதி என்று எளிதாகப் பொருள் காணும் நிலையில் இவ்வடிகள் இருக்கின்றன. இருப்பினும் காப்பியத்தை முழுமையாகப் பார்க்கும் போது கதிரவனுக்கு மிகச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருப்பதையே காணமுடிகிறது. கதிரவன் ஒளியை எள்ளும் நிலையில் ஓர் உவமையைச் சாத்தனார் அமைத்திருப்பாரா என்பது கருதுவதற்கு உரியது.

அறத்தின் நாயகரான புத்தரைக் குறிப்பிடும்போது, 'புத்த ஞாயிறு' (12, 86) என்றே கூறப்படுகிறது. மேலும்,

> "இருள்பரந்து கிடந்த மலர்தலை யுலகத்து
> விரிகதிர்ச் செல்வன் தோன்றின னென்ன"
>
> (12, 75 - 76)

புத்தர் உலகில் தோன்றியதாகக் காப்பியம் குறிப்பிடுகிறது. உறுதியாகப் பௌத்தக் காப்பியமான மணிமேகலை புத்தருக்கு மேலாக யாரையும் கருதி இருக்க முடியாது. ஆகையினால் குறிப்பிட்டுள்ள உவமையை 'இளங்கதிர் ஞாயிறு எள்ள' என்று பிரித்து 'எள்ள' என்பதைப் 'போல' என்று பொருள் படும் உவமை உருபாகக் கொண்டு விளக்கம் காண்பது முறையாகத் தோன்றுகிறது. மேலும், 'எள்ளும்' என்பது 'உவமவுருபுமாம்' என்று உரையாசிரியரும் குறிப்பிட்டுள்ளார்[1]. இம்முறையில் பொருள் காண்பதற்குத் தடையாகும் எந்தச் சிக்கலும் இல்லை. ஆகையினால் 'எள்ள' என்பதையும் சேர்த்துச் சாத்தனார் பதின்மூன்று உவம உருபுகளைப் பயன்படுத்தியுள்ளதாகக் கூறலாம்.

மரபுவழிப் பயன்படுத்தப்படும் பழக்கமான உவமைகள் பெரும்பாலும் தொகையாக 'மலரடி (3, 92), பவளச் செவ்வாய் (3, 117 , பிறை நுதல் (3, 119) என்பன போன்று பயன்படுத்தப் பட்டுள்ளன. இவை தவிர 'அம் சாரியைப் பெற்று காந்தளஞ் செங்கை' (9, 2) என்பது போலவும் தரப்பட்டுள்ளது. மேலும், ஒப்புப் பொருளுடைய ஐந்தாம் வேற்றுமை உருபான 'இன்', இணைக்கப் பெற்றுப் 'பவளப் பாவையின் இளங்கொடி தோன்றுமால்' (4, 124 125) என்னும் உவமைத் தொடர்கள் வந்துள்ளதைக் காணலாம். நன்கறிந்தவற்றை உருவக உவமைக் கலைகளாக்கிப் பொருள் சிறப்பும் கலைச் சிறப்பும் விளங்க அமைத்துள்ள முறை பொருத்தமாகக்காணப்படுகிறது.

"ஒத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுதம்'
(18, 80 - 71)

என்பதும்,

',மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கயல் நெடுங்கண்"
(18, 74 – 75)

என்பதும் எவ்வாறு அமைந்து சிறந்துள்ளன என்பதைச் சிந்திக்கலாம்.

பொதுவாக, வழக்கத்துக்கு மாறான உவமை அமைப்பு முறையும் காணப்படுகிறது. தாமரை முகத்துக்கு உவமிக்கப் படும் மரபுக்கு மாறாக, 'மாதர்நின் முகம்போல விரைமலர்த் தாமரை' (4. 15-16) என்று மாற்றிக் கூறியுள்ள அமைப்பும் உள்ளது.

கூறவந்த செய்திக்குப் பொருள் அழுத்தம் கொடுக்கும் முறையில் ஒரு பொருளுக்கு இருவேறு உவமைகளை இணை யாகத் தந்து விளக்கும் போக்கையும் சாத்தனாரிடம் காண முடிகிறது. உதயகுமாரன் மனம் துடிக்க வேகம் விரட்ட மணிமேகலையை நாடி உவவனத்துக்குத் தேரேறி விரைவதை,

"நீல மால்வரை நிலனொடு படர்ந்தெனக்
கால வேகங் களிமயக் குற்றென
விடுபரிக் குதிரையின் விரைந்து சென்றெய்தி"
(4, 43-45)

என்று கூறுவதைச் செயலுணர்வுப் பொருத்தம் கண்டு சிந்திக்க லாம். இதில் உருவுவமையாக நீல மால்வரையும் வினையுவமை யாகக் கால வேகமும் வந்துள்ளன கால வேகம் என்பதனைப் பட்டத்து யானையின் பெயராகக் கூறிப்பொருள் காண்பது உண்டு.

ஒரே பொருளின் சிறப்பு, சீரிழப்பு ஆகியவற்றை ஈரடுக்கு உவமைகளாகக் கூறிக் கருதிய பொருளைக் கருத்தாழமுடன் விளக்கும் திறமையினையும் காணலாம். பெண்ணாசையைப் பொருளற்றதாகக் காட்ட விரும்பிய கவிஞர் ஒரு முதியவனின் உறுப்பமைப்பை இளமை முதுமை ஒப்பீடாக உவமை அடுக்குகள் வாயிலாக விளக்குகிறார்.

"நீரைமுத் தனைய நகையுங் காணாய்
சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின"
(20, 49 - 50)

என்பது போன்று உவமைகள் அமைக்கப்பட்டுள்ளமை கருத்தழுத்தக் கருதுகோள் உடையதாகும்.

பொருளடக்கக் கூறுகள்

நடப்பு நிகழ்ச்சிகள், உணர்ச்சி வேகம் போன்றவற்றை அடக்கக் கூறுகளாகக் கொண்டு உவமைகள் அமைக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். இந்திரனுக்கு விழா எடுக்க விரும்பும் நிலை மணிமேகலையில் விரிவாகக் கூறப்படுகிறது. விழாவெடுக்கத் தவறினால் நகருக்கு அழிவு நேரும் என்பது விளக்கப்படுவதைக் காணலாம். 'இடிக்குரல் முழக்கம்' கொண்ட சதுக்கப் பூதம் புடைத்துணும் அவலச் செய்தி முதலில் தரப் பட்டுள்ளது (1, 22). விழாவெடுக்க வேண்டும் என்ற அறிவிப்புச் செய்தி, 'இடியுறு முழக்கின்' (1. 29) வேக ஒலியுடைய 'கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை முரசு' (1, 30) கொண்டு மக்களுக்குத் தரப்படுகிறது

பூதத்தின் குரலும் முரசின் ஒலியும் இடிமுழக்கத்துடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருப்பது கருதுவதற்கு உரியது. இடியானது அச்சம், அழிவு, அவலம் ஆகிய தீயவற்றுக்கு ஆதாரமாவது. இன்ப நிலைக்கு உரிய விழா நடப்பதை அறிவிக்கத் தீயதைச் சுட்டும் உவமைப் பொருளைக் கொண்டு சாத்தனார் விளக்க முயல்வது சிந்தனைக்கு உரியதாகத் தோன்றுகிறது. மக்கள் மனமுவந்து ஈடுபடாத சூழ்நிலையில் நகரழிந்துவிடுமே என்ற அச்சத்தில் விழாவெடுத்துத் தீர வேண்டும் என்ற கட்டாயத் தேவையால் இத்தகைய அறிவிப்புச் செய்யப்பட்டதாகக் கருத இடமுள்ளது. முரசுச் செய்தி அறிவிப்பாக அமையாது ஆணையாக அமைவதைக் காணலாம்.

மேலும், மக்களிடம் கொள்கை வேறுபாட்டு உணர்ச்சி மேலோங்கி இருந்திருக்க வேண்டும் என்று கருதுவதற்கும் இடம் உள்ளது. அத்தகைய ஒரு பிரிவு மனப்பான்மையும் எதிரிடைப் போக்கும் இருந்ததனால்தான்,

"பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்" (1. 92-93)

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1.	Tamil Literature — Prof. M. S. Purnalingam Pillai	உரு. 85/— U.S.$ 17
2.	மொழி நூல் —மாகறல் கார்த்திகேய முதலியார்	உரு. 75—
3.	Tamil University Machine Translation System (TUMTS) Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan	Rs. 75/— U.S.$ 15
4.	A Study on the Thanjavur Art Plate — Prof. P. Saravanavel	Rs. 60/— U.S.$ 12
5.	நாமதீப நிகண்டு —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்	உரு 68—
6.	மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை	உரு. 45/—
7.	Indians in South Africa — Prof. K. Nambi Arooran	Rs. 60/— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படி.
களுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ. 50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6	00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2	00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0	62
சிவமும் செந்தமிழும்—பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ. 0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ. 6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சீ. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பீ. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சீ. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரர் மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு பா. மதிவாணன், எம். ஏ., எம்.பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

5

பெறுநர்

திருமிகு ......

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
Madras. 600 005.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.